

விலை ரூபா 2=00 ★ 12 பக்கங்கள்

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

இடி அமினை விரட்டியவர் கவிழ்க்கப்பட்டார்

(அம்பாலா)

உகண்டாவில் ஏற்பட்ட இரத்தம் சிந்தாப்புரட்சி மூலம் அதிபர் மில்டன் ஒபேட்டே பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டார்.

அதிபர் ஒபேட்டே 1979ம் ஆண்டு இடி அமீனைப் பதவியிலிருந்து கவிழ்த்ததன்மூலம் ஆட்சி பீடத்திற்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரா)

மலர் 27 ஆடி 13 ஜூலை 9 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (28—7—85) இதழ் 168

தமிழர் கொலைகளைக் கண்டித்து

நேற்று மாபெரும் ஊர்வலம்

(ஏ. வி. மாணிக்கம்)

1983 ஜூலை இனக் கலவரத்தில் பலியான தமிழ் மக்களுக்கும் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் அஞ்சலி செலுத்திப் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்த தமிழ் மக்கள் நேற்றுப் பிற்பகல் 83 ஜூலை இனப்படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்துப் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள்.

உடுவில் - மருதனுமடம் சந்தியில் நேற்று நண்பகல் 1-30 மணியளவில் இவ்வூர்வலம் ஆரம்பமானது.

இந்த ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ். மாவட்டத்தின் நாலா பகுதிகளிலுமிருந்து கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது வாகனங்களில் மக்கள் வந்து கூடத் தொடங்கினர்.

இளைஞர்கள், யுவதிகள், அன்னையர்கள், தந்தையர்கள், சிறுவர், சிறுமிகள் என்று ஆகப் பல்லாயிரக் கணக்கானோர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்'

ஊர்வலத்தின் இரு மருங்கிலும் இளைஞர்கள் சங்கிலிக் கோர்வைபோல் கைகளை இணைத்துக் கொண்டனர்.

ஊர்வலத்தின் நீளம் சுமார் 3 மைல் தூரமாகும்.

கிராமம் கிராமமாக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுவரும் போர் நிறுத்தத்தைக் கண்டித்து நடாத்தப்பட்டு வரும் முகமூடித்தெருக்கூத்து நாடகமாடிகள் ஊர்வலத்தின் முன்னே சென்றுகொண்டிருக்க, ஊர்வலம் ஆமைபோல் நகர்ந்தது.

'ஜூலை இனப்படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம்' என்ற வாசகம் பொறிக்கப்

(12-ம் பக்கம் பார்க்க)

இறுதிக் கட்டத்தில் கடத்தல் விசாரணை

(கொழும்பு)

வட பகுதித் தீவிரவாதிகளுக்குப் பல லட்சம் டொலர் பெறுமதியான ஆயுதங்களைக் கடத்தியதாகக் கூறப்படும் மோசடி தொடர்பான விசாரணைகளைக் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் பூர்த்தி செய்யும் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்த விசாரணையின் போது சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதப்பட்டவர்களின் வாக்கு மூலங்களைத் துப்பறியும் பகுதியினர் இறுதியாகப் பரிசீலனை செய்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. (ரா)

பஞ்சாபில பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் கொலை!

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் இனந்தெரியாத இருவரால் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமானார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை அமிர்தசரஸ் நகரில் இடம்பெற்றது. வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போதே உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நகர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் மரணமானார். இக்கொலை சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இக்கொலை தொடர்பாக மாநில பொலிஸ் கமிஷனரின் நேற்றைய அறிக்கையில்; இத்துப்பாக்கிச் சூட்டுக்கொலை பயங்கரவாதிகளின் வன்முறைச் செயலா அல்லது தனிப்பட்ட பகைமைச்செயலா என்பதை உடன்தெரிவிக்க முடியாது இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்கள் மீண்டும் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டவில் டிப்போவிலிருந்து கடத்திச்செல்லப்பட்ட நான்கு பஸ்கள் மீண்டும் டிப்போவில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

உல்லாசத்தம்பதி விடுவிக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து வாகனத்துடன் கடத்திச்செல்லப்பட்ட வெளிநாட்டைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணத் தம்பதிகள் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ராணுவ முகாமிலிருந்து மீண்டவர் வெட்டிக் கொலை!

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

ஆயுதப்படையினரால் கைதாகி காவலில் வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி 3-ம் வாய்க்கால் வாசியான இளம் குடும்பஸ்தர் வி. இராதாகிருஷ்ணன் (ராதா) இரவு வேளை இனந்தெரியாதவர்களால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25-ம் திகதி இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது கொலையுண்ட இராதாகிருஷ்ணனின் உடலில் பலத்த வெட்டுக்காயங்கள் காணப்பட்டன.

இவரைக் கொலை செய்தவர்கள் கொலைக்கான உரிமை கோராமலே விட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவ தினம் இரவு கொலையுண்டவரின் வீட்டிற்கு வந்த இனந்தெரியாதவர்கள் இவரை விசாரணைக்கெனக் கொண்டு சென்றதாகவும் அப்போது இவரது மனைவியும் பின் தொடர்ந்து சென்றதாகவும் மனைவியைச் சிறிது தூரத்தில் நிற்குமாறு கூறிய அவர்கள் சொற்ப தூர வித்தியாசத்தில் இராதாகிருஷ்ணனை ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்துவிட்டு ஓடிவிட்டதாகவும் விசாரணையில் இவரது மனைவி தெரி

(12-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவில் கூட்டணித் தலைவர்கள்

இலங்கை முஸ்லிம் தலைவர்களை எதிர்பார்த்திருக்கின்றனர்

சூசைதாசன் தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் 12-ம் திகதி மீண்டும் திம்புவில் நடைபெறவுள்ள இலங்கை இனப்பிரச்சனைக்கான மாநாட்டில் கலந்து கொள்ளும் போது மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் குறித்துத்தற்போது தமிழகத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமிழ்த் தீவிரவாதக் குழுவினரும் ஆலோசனைகள் செய்து வருகின்றனராம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பீட உத்தரவின் பேரில் தமிழகம் சென்று கொழும்பு திரும்பிய முன்னை நாள் மன்னார் எம்.பி. சூசைதாஸன் இலங்கை முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும் கல்முனை எம்பியுமான ஜனாப.மன்சூர், ஜனாப் மசூர் மௌலானா. அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஆகியோருடன் இதுவரை திரு சூசைதாஸன் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். இதனை அடுத்து ஏனைய முஸ்லிம் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து

(12-ம் பக்கம் பார்க்க)

"இனப்பிரச்னை தீர்வின்றேல் நாட்டை இருள் சூழும்!"

—நிதி அமைச்சர்

(தெனியாய)

"இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் இந்நாட்டின் எதிர்காலம் இருளடையும் அபாயத்திலிருந்து தப்பமுடியாது" என்று நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டீ மெல் அச்சம் தெரிவித்துள்ளார்.

தெனியாயவில் இடம்பெற்ற பொது வைபவமொன்றில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் இலங்கை போன்ற ஒரு சிறிய நாடு தொடர்ந்து போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்க முடியாதென்றும், இந்நிலை தொடருமானால் அபிவிருத்திகள் ஸ்தம்பிதமடைவதுடன், புதிய வேலை வாய்ப்புக்களும் ஏற்படமுடியாது போய்விடும் என்றும் தெரிவித்தார். [ரா]

பூட்டான் 2ம் கட்டப்பேச்சு: இந்தியா ஒத்துழைக்கும்

இலங்கை நம்பிக்கை

(கொழும்பு]

இனப்பிரச்னை குறித்து பூட்டானில் நடைபெறவுள்ள இரண்டாவது பேச்சுவார்த்தையை சீர்குலைக்கும் நோக்குடன் சில தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் புதிதாக வன்முறைகளில் ஈடுபடத் திட்டமிட்டு வருவதாகத் துப்பறியும் பகுதி அறிக்கைகள் அறிவித்துள்ளன;

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தீவிரவாதக் குழுக்களும் விட்டுக்கொடுக்காத போக்கைக் கடைப்பிடித்து வருவதாகவும், இருப்பினும் பூட்டான் பேச்சுவார்த்தைக்குத் தூண்டுகோலாக இருந்த இந்தியா மேலும் தனது ஒத்துழைப்பை வழங்கி, திட்டமிட்டபடி இர

[12-ம் பக்கம் பார்க்க]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம் உயர் விலைக்குப் பெறப்படும். தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ்.ரோட், யாழ்ப்பாணம். 4677

மாட்டீன் ரோட் ஒழுங்கையில் 1½ பரப்பில் நன்னீர்க் கிணற்றுடனும் வசதிகளுடனும் வீடு. யோசப் மிருகவைத்தியர், யாழ்ப்பாணம். 4578

கனகராயன் குளம் இருந்து அரை மைல் தூரத்தில் கண்டி ரோட்டை எல்லையாகக் கொண்டகுறிசுட்டகுளம் நீர்ப்பாய்ச்சல் உடைய 6 ஏக்கர் வயலும் அதற்கு எதிர்ப்புறமாக கிணற்றுடன் 6 பரப்பு மேட்டு நிலமும் விற்பனைக்குண்டு. கூடிய கேள்விக்காரருக்கு மேட்டுநிலம் கிரயமின்றி கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: கா குமாரசாமி, பொன்னுலை, சுழிபுரம் அல்லது கிராமசேவையாளர், 'புளியங்குளம். 4639

தற்போது 10 போத்தல் கறக்கும், கன்றுஈன்று இரண்டு கிழமையாகவுள்ள சிவப்பு நிறமுடைய 5 வயது ஜேசி இன மாடு விற்பனைக்குண்டு. விலை: 4,500/-. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ இராஜலிங்கம், ''இராஜஸ்தான்'', கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு. 4635

அழுத்தமானஅம்மி, ஆட்டுக்கல், கல்உரல், திருகை ஹோட்டலுக்குத் தேவையான பெரிய அளவிலான ஆட்டுக்கல்அனைத்தும் கருங்கல்லில் கைதேர்ந்த தொழில் நுட்பக் கலைஞரால் கடையப்பட்டது: தயாரித்து அளிப்போர் சூரியாஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில்வீதி, வவுனியா. சாவகச்சேரியில்: சுல்தான் அப்துல்காதர் சகோதரர்கள், கண்டிவீதி, சாவகச்சேரி. 4059

சாவகச்சேரியில் பொலிஸ் நிலைய ஒழுங்கையில், தென்னை மரங்களோடு கூடியதும், வீடு கட்ட உகந்ததுமான இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பா. இளமாறன், 8, கோணாவளைரோட், கொக்குவில். 4700

வைத்தியம்

மனநோய், காக்கைவலி, கான்சர், கழலைகட்டிகள், சர்மரோகங்கள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சையளிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும். டாக்டர் எம். வி. நிமலசந்திரன், Homoeopath, 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4688

தேவை

தமிழ், ஆங்கில தட்டெழுத்தும் தமிழில் சுருக்கெழுத்தும் கற்பிக்கக்கூடியவர்கள் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விண்ணப்பிக்கவும். செந்தூரன் ரேடியோ கொம்பனி, K. K. S. Road, Jaffna. 4706

யாழ். நகரில் வங்கிக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. T. குணரத்தினம், சீ-நோர் பங்களா, திருஞானசம்பந்தர் லேன், வட்டுக்கோட்டை. 4638

T. V., றேடியோ திருத்துவதில் அனுபவம் வாய்ந்த பகுதிநேர வேலையாட்கள் தேவை. T சிறிதரன், 560, பீச்ரோட், குருநகர், யாழ்ப்பாணம். 4708

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ250/- ரூபா. தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 4676

மணப்பந்தல்

இந்து வேளாள பெற்றோர். 31 வயது B. Sc. Civil Engineer சிங்கப்பூரில் வேலை பார்ப்பவருக்கு மணமகள் பொறியியலாளர் அல்லது M. B. B. S. சித்தியடைந்தவரை எதிர்பார்க்கிறார்கள். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4712, C/o. ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 4712

சிறந்த ஆங்கில அறிவுடன் கொழும்பு தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரியும், சீதனமாக கொழும்பில் ஆதனமும், காசு நகைகளும் உள்ள யாழ்ப்பாண இந்து செவ்வாய் தோஷமற்ற பெண்ணிற்கு, 30-36 வயதிற்குட்பட்ட நிரந்தரமான நல்ல தொழிலில் உள்ள மணமகன் தேவை. சாதகக்குறிப்பு, மற்றும் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 4634, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 4634

TO LET

Newly built spacious house with all facilities available immediately at Athiady Contact: 63. Point Pedro Road, Anaipanthy, Jaffna. 4709

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

ரோயல் தயாரிப்புகளை வடமாகாணத்தில் வானில் சென்று விற்பனை செய்வதற்கும் யாழ். நகரில் ஓடர் சேகரிப்பதற்கும் குறையாத ஐந்து வருட அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. அடிப்படை சம்பளத்துடன் கொமிஷனும் வழங்கப்படும். உடன் உங்கள் நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வர வேண்டிய முகவரி:

தலைமைக் காரியாலயம்:

சிவா இன்டஸ்றீஸ்,

22 1/1, ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 26679

யாழ் கிளை:

சிவா இன்டஸ்றீஸ்,

பொன்னையா ஒழுங்கை, வண்ணார்பண்ணை வடமேற்கு
ஆனைக்கோட்டை.

குறிப்பு: (பிடாரி கோவிலடி உபதபால் கந்தோருக்கு அருகாமையில்) [4694]

சோதிடம்

3-8-1985 தொடக்கம் சனி மாற்றம் பன்னிரு ராசிகளுக்கும் பூரண பலன். சோதிடர் ஆ. சிவராசா, வேலணை. 4703

வெளிநாட்டு ஜனாதிபதிகளால், பிரதமர்களால், சோதிட சஞ்சிகை, வானொலி ஸ்தாபனம், பத்திரிகைகளால் பாராட்டப்பட்டுள்ள சர்வதேசப் புகழ்பெற்ற சோதிடரிடம் உங்கள் விடயங்களுக்கு ஆலோசிக்க நேரிலோ அல்லது தபால் மூலமோ விபரமறிய விரும்புவோர் (ரூபா இரண்டுக்கு முத்திரை அனுப்புக): அ. வி. கணேசநாதன் ''இரத்தினபவனம்'' பாதிரியடைப்பு, மயிலிட்டி, காங்கேசன்துறை. 4656

Astrologer and Palmist தங்கள் கைரேகையுடன் சாதகங்களையும் ஆராய்ந்து பிறநாட்டுப் பிரயாணத்தின் பயன்பாடு, கல்யாணத்தில் கிடைக்கும் கணவர் தோற்றம் குணம் உத்தியோகம் திக்கு. திருமணப் பொருத்தத்தில், செவ்வாய் பாவ நிவிர்த்தி, விதிவிலக்குகளுடன் பெறவும், மாணவர் உகந்த உயர்கல்வித் தேர்வு, காதலர் நோயாளிகள் தீர்மான ஆலோசனை பெறவும் அழைக்கின்றோம். இராசேந்திரன், ''திருவுளம்'' பிறஸ் லேன், ஸ்ரேசன் ரோட், கொக்குவில். 4698

2-வது பிறந்த தின வாழ்த்து

செல்வன்

முகுந்தன்

28-07-1985

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ஸ்ரீதரன்-மல்லிகா தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் இன்று தனது இரண்டாவது பிறந்த தினத்தை இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார்.

அவரை அப்பா, அம்மா, அப்பையா, ஐயா, அம்மம்மா, தாத்தா, தாத்தை, பீட்டப்பு, அத்தை, சித்தப்பா, அத்தான்மார் மயூரன், மனோராஜ், சித்திமார், மாமன்மார், M P. தாத்தா ஆகியோர் ஆலடி விநாயகர் அருள்பெற்று சீரும் சிறப்புமாக நீடூழி வாழ்க வென வாழ்த்துகிறார்கள். (4647)

வியாபாரம் பெருக விளம்ரம் செய்க

விற்பனைக்கு

றேடியோ, தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ, டெக் இவற்றின் உதிரிப்பாகங்கள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

சித்ரா றெக்ஸ்ரைலஸ்

(ரெலிகோணர் கிளை)
159, மின்சாரநிலைய வீதி, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். 4633

1-வது ஆண்டு நினைவஞ்சலி

சுந்தரலிங்கம் பிரபாகர்

தோற்றம்: 8-9-1967
மறைவு: 8-8-1984

பெற்றோர், அண்ணன்மார்கள்,
தங்கை, தம்பிமார்கள்.

மயிலிட்டி. 4713

trust travel service

11/A மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T. P: 24111

தலைமைக்கந்தோர்:
65, சதாம் வீதி,
ஹைறிராமணி ஆர்காட்,
கோட்டை.

★ உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு ஏரோ புளட் விமானத்தின்மூலம் கீழ்வரும் நகரங்களுக்கு கவர்ச்சிகரமான விலைக் குறைப்பு டிக்கட்டுடன் உங்கள் பயணத்தை தொடரலாம்.

கொழும்பு / ஒஸ்லோ, ஸ்ரொக்கோம், [illegible] கெல்சிங்கி, பிராங்பேட், பாரிஸ், பெய்ரூட், அம்மான், கெய்ரோ.

★ இதனைத் தவிர மத்திய கிழக்கு, தூரகிழக்கு நகரங்களுக்கு ஏயர் லங்கா விமானத்தின்மூலம் குறைந்த விலையில் டிக்கட்டுகளை பெறலாம் 26 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு 35% கழிவு ஏயர் லங்காவில் தரப்படும்.

அத்தோடு எமது தலைமையகம் மேற்கொண்டுள்ள புதிய வியாபார யுக்திகளை உங்கள் வியாபாரத்தில் அறிமுகம் செய்துகொள்ளலாம்.

ரஸ்ற் ரவல் சேர்விஸ்

முதலாண்டு நினைவஞ்சலி

திரு. மாணிக்கம் பத்மநாதன்

(களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். மாநகர சபை)

எங்கள் அன்புத் தெய்வமே! நின் உயிரைப் பறித்து எம்மை அநாதைகளாக்கினரே. நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டென்ன, நாம் வாழும் வரை பரிவும் பாசமும் எம்மனதில் நிலைத்து வாழும். எமது கண்ணீர் அஞ்சலியை ஏற்பீர்களாக.

மனைவி, பிள்ளைகள்.

பரமேஸ்வரி பவனம்
ஐயனார் கோவிலடி
கொக்குவில் மேற்கு. 4710

பஞ்சாப் உடன்பாட்டை அகாலிதள் ஒருமனதாக ஏற்றுக்கொண்டது

கிளர்ச்சியைக் கைவிடவும் தீர்மானம்

[புதுடில்லி]

அனந்தபூர் சாகிப் கூட்டம் பஞ்சாப் குறித்த உடன்பாட்டை நேற்று ஒரு மனதாக ஊர்ஜிதம் செய்துவிட்டது.

பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்கும் அகாலிதள் தலைவர் லோங்கோவாலுக்கும் இடையில் ஏற்பட்ட பஞ்சாப் குறித்த உடன்பாட்டுப் பத்திரத்தை அனந்தபூர் சாகிப்பில் நடந்த அகாலிதள் கட்சிக் கூட்டம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கப்பட்ட கிளர்ச்சியைக் கைவிட்டு விடுவதென்றும், கட்சி முறைப்படியாக அறிவித்துவிட்டது.

கட்சியின் மாவட்ட மற்றும் வட்டாரத் தலைவர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், சிரேஷ்ட உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் இன்னும் வேறு பல பிரபல தலைவர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும் குருத்வாராவுக்கு வெளியே திரண்டிருந்த மற்றவர்களும், இந்த உடன்பாடு ஊர்ஜிதமான செய்தியை முழுச் சம்மதத்துடன் உரத்த கோஷமெழுப்பி வரவேற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் பேசியவர்களில் அகாலிதள் தலைவர் லோங்கோவால், திரு. பிரகாசிங் பாதல், திரு. குர்தாசிங் தோடா, திரு. பல்வத்சிங் தல்வான்டி, சுஜிதிங், பர்னுஸா ஆகியோரும் அடங்குவர்.

திரு பல்வந்சிங் இந்த உடன்பாட்டைக் கூட்டத்தின் முன் சமர்ப்பித்தார்.

தலைவர் லோங்கோவால் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், பெதுவாக ஆலோசனைகள் நடைபெற்றதென்றும், ஐயப்பாடுகள் யாவும் தெளிவுபடுத்தப்பட்டன என்றும் தெரிவித்தார்.

கட்சியில் முழு அளவிலான ஒற்றுமை நிலைத்திருப்பதாகக் கூறிய அவர், கட்சி தொடர்ந்து ஒன்றுபட்ட விதத்திலேயே செயல்படும் என்றார்

பஞ்சாப் குறித்த உடன்பாடு பயங்கரவாத மற்றும் பிரிவினைச் சக்திகளை முறியடித்துவிட்டதென்று கூறி ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. ஹரிதேவ்யோசி அதனை வரவேற்றிருக்கிறார். பக்கத்து மாநிலங்களுடன் ஆற்றுநீர் வளங்களைப் பகிர்ந்து கொள்வதான பிரச்சினை குறித்து புதுடில்லியில் பிரதம மந்திரி ராஜீவ் காந்தியுடன் பேச்சு நடத்திய ராஜஸ்தான் முதல்வர், மாநிலத்தின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று தான் உறுதியுடன் நம்புவதாகத் தெரிவித்தார்.

பஞ்சாப் சம்பந்தமாகப் பிரதமர் ராஜீவுக்கும் திரு. லோங்கோவாலுக்கும் ஏற்பட்டுள்ள உடன்பாடு பஞ்சாப் மாநில மக்களுக்குக் கிடைத்துள்ள ஒரு மாபெரும் வெற்றியாகும் என பஞ்சாப் கவர்னர் திரு அர்ஜன்சிங் கூறியுள்ளார்

பஞ்சாப் உடன்பாட்டை சீக்கிய அரசாங்கமும் வரவேற்றுள்ளது. இந்த உடன்பாட்டைப் பாராட்டிய ஜம்மு-காஷ்மீர் சட்டப் பேரவையின் சபாநாயகர் திரு மங்கட்ராம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுச் சக்திகளை வலுப்படுத்துவதில் இது வெகுவாகத் துணைபுரியும் என்றார்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த உடன்பாட்டில் ஒப்பமிட்டதற்காகப் பிரதம மந்திரிக்கும் அகாலிதள் தலைவருக்கும் ஜம்மு-காஷ்மீரில் எல்லா அரசியல் மற்றும் சமூக, இயக்கங்களும் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றன. (க)

அமெரிக்க, சோவியத், பாக், பத்திரிகைகள் பாராட்டு!

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், அகாலிதள் தலைவர் திரு லோங்கோவாலுக்கும் இடையில் ஏற்பட்ட பஞ்சாப் உடன்பாட்டை அமெரிக்க, சோவியத், பாகிஸ்தான், பிரிட்டிஷ், வளைகுடா செய்தி ஏடுகள் பாராட்டியுள்ளன

சோவியத் நாளேடான 'பிராவ்டா' இந்த உடன்பாட்டை வரவேற்றிருக்கிறது. பஞ்சாப்பில் வழமையான நிலைமையைத் தோற்றுவிப்பதில் இதுவொரு முக்கியமான நடவடிக்கை என்று அந்த ஏடு குறிப்பிட்டது.

பிரிட்டிஷ் செய்தி ஏடுகளும் பஞ்சாப் உடன்பாட்டைப் பாராட்டியுள்ளன.

வளைகுடா நாடுகளின் பத்திரிகைகளும், மற்றும் தகவல் அறிவிப்புச் சாதனங்களும் பஞ்சாப் உடன்பாட்டுக்கு முக்கிமதித்துவம் அளித்துள்ளன.

இந்த உடன்பாடு லோகசபா தேர்தலில் ராஜீவ் காந்திக்குக் கிடைத்துள்ள அமோகவெற்றி மற்றும், மாஸ்கோவிற்கும் வாஷிங்டனுக்கும் அவர் மேற்கொண்ட வெற்றிகரமான பயணங்களுக்குப் பிறகு கிடைத்துள்ள மற்றுமொரு பெரும் சாதனையாகும் என்று பிரபல அமெரிக்கச் செய்தி ஏடு 'நியூயோர்க் டைம்ஸ்' தெரிவித்திருக்கிறது.

பஞ்சாப் உடன்பாட்டைப் பிரபல பாகிஸ்தானிய நாளேடுகளும் பாராட்டியுள்ளன.

உலக பிலியட் சாம்பின் போட்டி:

மைக்கல் பெரேரா

முதல் சுற்றில் வெற்றி

(புதுடில்லி)

தற்போது புதுடில்லியில் நடைபெறும் 25 வது உலக 'அமெச்சூர்' பிலியட் சாம்பியன்போட்டியில் தற்போதைய அமெச்சூர் பிலியட் சாம்பியனான மைக்கல் பெரேரா முதல் சுற்றில் வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் இவர் நியூஸிலாந்தின் ஆர். ரொபின்சனை 1847-984 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தோற்கடித்தார். இந்தியாவின் மற்றொரு வீரரான சுபாஸ் அக்கருவால் இலங்கையின் முதல்தர ஆட்டக்காரரான திரிசோமாவை தோற்கடித்தார்.

10 நாடுகளைச் சேர்ந்த 16 வீரர்கள் கலந்து கொள்ளும் இப் போட்டியினை இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி நேற்று முன்தினம் தொடக்கி வைத்தார்.

இந்தியாவைச் சேர்ந்த வீரர் மைக்கல் பெரேரா 8 தடவைகள் அமெச்சூர் உலக பிலியட் சாம்பியன் பட்டத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூப்பனார் வாழ்த்து

(புதுடில்லி)

அகில பாரத காங்கிரஸ் (ஐ) பொதுச் செயலாளர் திரு. கருப்பையா மூப்பனார் நேற்று புதுடில்லியில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனை சந்தித்து அவரது ஜப்பான் பயணம் வெற்றியடைய வாழ்த்துத் தெரிவித்தார். (க)

மூன்று அமைச்சர்களிடம் முதல்வரின் பொறுப்புகள்

[சென்னை]

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் ஜப்பான் சென்றுள்ளதினால் அவரது அமைச்சரவையிலான பொறுப்புக்கள் மூன்று அமைச்சர்களிடம் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன.

நிதியமைச்சர் திரு. நெடுஞ்செழியன், செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசுவாமி ஆகிய மூன்று அமைச்சர்களிடமே இந்த பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவுக்கு

உலகம் தழுவிய எதிர்ப்பு! பந்தோபஸ்துசபைகோரிக்கை

(லண்டன்)

தென்னாபிரிக்காவிலுள்ள இன ஒதுக்கல் ஆட்சிக்கு எதிராக உலகம் தழுவிய அடிப்படையில் தடை விதிக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை ஐ நா. பந்தோபஸ்து சபை ஆமோதித்துள்ளது.

சென்றவாரம் தென்னாபிரிக்காவில் விதிக்கப்பட்ட நெருக்கடி நிலையை எதிர்க்கும் விதத்தில், தென்னாபிரிக்காவில் வெள்ளையர் இன ஒதுக்கல் ஆட்சிக்கு எதிராக உலகத்து நாடுகள் அனைத்துமே வலுவில் முன்வந்து தடைகளை விதிக்க வேண்டும் என்று கோருவதான தீர்மானமொன்றை ஐ. நா. பந்தோபஸ்துசபை ஆமோதித்துள்ளது.

இச்சமரச தீர்மானத்திற்கு ஆதரவாக 13 வாக்குகள் பதிவாகின. எதிராக எவரும் வாக்களிக்கவில்லை. பிரிட்டனும், அமெரிக்காவும் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை.

பந்தோபஸ்துசபையின் இந்த தீர்மானம் இன ஒதுக்கல் கொள்கையையும் சமீபத்தில் தென்னாபிரிக்கா அரசு பெருமளவில் மக்களை கைதுசெய்து காவலில் வைத்ததையும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

தென்னாபிரிக்கா அரசு நெருக்கடி நிலையை உடனடியாக நீக்கிவிடவேண்டுமென்று அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்நாட்டின் மீது கட்டாய தடைகளை விதிக்க சிபார்சு செய்து மண்டல சார்பற்ற 6 உறுப்பு நாடுகள் ஐ. நா. பந்தோபஸ்து சபையில சமர்ப்பித்த திருத்தங்களை பிரிட்டனும் அமெரிக்காவும் ரத்து அதிகாரம் மூலம் நிராகரித்துவிட்டன.

தென்னாபிரிக்கா அரசு நெருக்கடி நிலையை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென்று அமெரிக்கா முன்னர் கூறியது.

இதனிடையே தென்னாபிரிக்காவில் கொண்டுவரப்பட்டிருக்கும் நெருக்கடி நிலைக்கு பலத்த எதிர்ப்புஏற்பட்டுள்ளது. அங்கு 200க்கு மேற்பட்ட ஆபிரிக்கர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

புயல் எச்சரிக்கை நிலையங்கள்

(சென்னை)

இராமநாதபுரம் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் எலக்ரோனிக் சாதனங்கள் கொண்ட ஒன்பது புயல் எச்சரிக்கை நிலையங்கள் அமைக்கப்படவிருக்கிறது. வானிலை ஆராய்ச்சி இலாகா இவற்றை நிறுவும். செப்டம்பர் மாதத்திலிருந்து இந்நிலையங்கள் செயல்படும். [க]

அமைச்சருக்கு விருது

[கொழும்பு]

1985-ம் ஆண்டு உல்லாசப் பிரயாணத்துறைப் பிரமுகருக்கான விருது ராஜாங்க அமைச்சர் திரு.ஆனந்த திஸ்ஸடி அல்விசுக்கு வழங்கப் பட்டுள்ளது

பிரான்ஸிலுள்ள உல்லாசப் பயணத்துறை நிறுவனமொன்று இவ் விருதை வழங்கியுள்ளது.

பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு ஈ டி பிசு சில்வா ராஜாங்க அமைச்சர் சார்பில் இந்த விருதைப் பெற்றுக் கொண்டார். (து)

நாட்டுக்கூத்துக் கலைஞர்

அரியாலையூரைச் சேர்ந்த முதுபெரும் நாட்டுக்கூத்துக் கலைஞரான திரு. கணபதி ஐயம்பிள்ளை அவர்களின் பேட்டிக் கட்டுரை 8ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்திய குடியரசுத் தலைவர் சென்னை விஜயம்

[சென்னை]

பாரத குடியரசு தலைவர் ஜியானி ஸெயில்சிங் விசேட விமானப்படை விமான மூலம் நேற்றிரவு சென்னை வந்து சேர்ந்தார்.

தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானாவும், மாநில நிதியமைச்சர் திரு. நெடுஞ்செழியனும், விமான நிலையத்தில் குடியரசுதலைவரை அன்புடன் வரவேற்றார்கள். தமிழக அமைச்சர்கள், முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலமும், குடியரசு தலைவரை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந்தார்கள்.

குடியரசு தலைவர் விமான நிலையத்திலிருந்து ராஜ்பவனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நேற்று காலை அவர் அண்ணா நகரில் அண்ணா கல்விக் கூடத்தை திறந்துவைத்தார்.

பின் தென்பாரத கல்விகலாசார அறக்கட்டளையின் வெள்ளிவிழாகொண்டாட்டங்களை துவக்கிவைப்பார். நாளை காலை அவர் கலைவாணர் அரங்கில் பாரத பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் உருவப்படமொன்றை திரைநீக்கம்செய்து வைப்பார், நாளை மாலை பாடசாலையொன்றை திறந்துவைப்பார். திங்கட்கிழமை காலை அவர் சென்னையிலிருந்து புறப்பட்டுச்செல்வார். (க)

கொள்ளை

[வவனியா]

வவனியா - கண்டி வீதியில் உள்ள கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபன பிரதிநிதியினுடைய நிலையத்தில் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் கூரை பிரித்து உள்ளே சென்றவர்கள் இந்தகொள்ளையை நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

மின்சாரப் பொருள்கள் உட்பட பல பொருள்கள் இங்கிருந்துகொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கடையின் பின்புறம் வழியாகவே பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் இத்திருட்டு தொடர்பாக வவனியா பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

ஆங்கில அறிவின்றியே ஆரம்ப பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை செல்லும் நிலை!

சூழல் சார்ந்தபோதனா முறை புறக்கணிப்பே காரணம்

S. B. ஐயர்

பொதுவாக இன்று எல்லோரும் தமிழ் மாணவர்களின் ஆங்கிலக் கல்வியின் தரத்தையும் பேசும் ஆற்றலையும் குறை கூறுகிறார்கள். இந்நிலை ஏற்பட்டமைக்கு உரிய காரணங்களை எவரும் சிந்திப்பதாக இல்லை.

இன்றைய பட்டதாரி மாணவர்களுக்குக்கூட ஆங்கில மொழியில் திறமை இல்லை என்று அவர்கள்மீதும் அவர்களை உருவாக்கும் உயர் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களின் மீதும் குறைகூறுபவர்கள் இந்நிலையை உருவாக்கிய சூழ்நிலை பற்றி உணர்வதாகத் தெரியவில்லை.

கடந்தமுப்பத்துஏழு ஆண்டுகளாக இந்நாட்டில் ஏற்பட்ட அரசியல், சமுதாய மாறுபாடுகளை எடுத்துக் கொண்டால் ஆங்கில மொழிக் கல்வியின் தரம் குன்றியதற்கு விடை கண்டு கொள்ளலாம்.

வளர்ச்சி குன்றியது

இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததில் இருந்து தமிழ் மக்களுடைய அரசியல், சமூக, கலாசார, கல்வி நிலைகளில் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டதை ஒருவரும் மறுக்க முடியாது. மேலும், 1956ம் ஆண்டு தனிச்சிங்களச்சட்டம் நடைமுறைக்கு வந்தபோது தேசிய இன எழுச்சியும். மொழிப்பற்றும் வலுவடைந்தன. அதே நேரத்தில் ஒரு முகப்படுத்தப்பட்ட கல்வி அமைப்புத் திட்டத்தின்கீழ் தமிழ் மாணவர்களது கல்வி அமைப்பு முறை வளர்ச்சி குன்றியது.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் ஏராளமான கிறிஸ்தவ சங்கங்கள் பாடசாலைகளை அமைத்தும் ஆங்கிலப்பாட போதனையை வளர்த்தும் வந்தன. பெரும்பாலும் அவை தனிப்பட்ட முறையிலேயே இயங்கின. பின்பு ஒரு முகப்படுத்தப்பட்ட அரசாங்க பாடசாலை அமைப்புக்களின் கீழ் பாடவிதானத்திட்டம், நூல்கள் எல்லாம் மாற்றமுற்றன. அதாவது கலாசாரச் சூழ்நிலைக்கு ஏற்றபடி போதனா நூல்கள் தயாரிக்கப்படவில்லை. ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவந்த ஆங்கிலமொழியைக் கற்பிக்கும் நூல்களும் அரசியல் பின்னணியில் விலக்கப்பட்டன.

இப்பாரிய உண்மையைத் தமிழ்க் கல்விமான்களோ அல்லது அரசியலில் செல்வாக்கு மிக்கவர்களோ உணராதிருந்தனர். 1956ம் ஆண்டுவரை யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சிறந்த போதனா முறைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட ஆங்கில நூல்கள் பாட நூல்களாக அமைந்தன. அவை எல்லாம் தமிழரது தனித்துவமான கலாசாரத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூல்களாகும். அந்நூல்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதும் மாணவர்கள் கற்பதும் மிக இலகுவாக இருந்தது.

சூழல் சார்ந்த போதனையும் வடமாகாண ஆசிரியர் சங்கமும்

மொழியியலில் ஒரு சிறந்த அம்சம் மாணவர்களுக்கு நன்கு தெரிந்த விடயங்களைக் கொண்டே கருத்து விளக்கத்துடன்ஒருமொழியைக் கற்பித்தல்வேண்டும்என்பதே (SITUATIONAL APPROACH METHOD). இவ்வாறான சிறந்த முறையைக் கருத்தில் வைத்து எழுதப்பட்ட புத்தகங்களுள் ஒன்றுதான் ''தீபக் றீடர்ஸ்'' (DEEPAK READERS). இப்புத்தகங்கள் இந்தியாவில் தமிழ்நாட்டில் தமிழ் நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்ப அமைந்தவை. பொங்கல், தீபாவளி, றம்ழான், நத்தார், வருடப்பிறப்பு போன்ற பண்டிகைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பாடங்கள் இப் புத்தகங்களில் இடம்பெற்றன. தமிழ்இலக்கியச் செறிவுள்ளதாகவும் அவை இருந்தன. இந்நூல்களை யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்திய பெருமை அக்கால கட்டத்தில் வடக்கில் இயங்கி வந்த வடமாகாண ஆசிரியர் சங்கத்தைச் சார்ந்ததாகும். இச்சங்கத்தின் கல்விமான்கள் சிலர் தமிழ்நாடு சென்று ''DEEPAK READERS'' புத்தகங்களை எவ்வாறு ஆங்கில மொழிப் போதனைக்குக் கையாள்கிறார்கள் என்பதனை அறிந்து இங்கும் அதனை நடைமுறைக்குக் கொண்டுவந்தனர்.

நான் ஆங்கில ஆசானாக இருந்த காலத்தில் திருவாளர்கள் ஸி. வைரமுத்து (வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய முன்னாள் உபஅதிபர்), என். சபாரத்தினம் (முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபர்), ஏ. எஸ். கனகரத்தினம (முன்னாள் யாழ். இந்து ஆசிரியர் போன்ற பெரியார்கள் 'MADRAS STRUCTURES' எனும் ஆங்கிலக்கற்பித்தல் நெறிமுறையில் கைதேர்ந்தவர்களாகவும் அதனைப் பரப்புவதில் ஆர்வமமிக்கவர்களாகவும் மிளிர்ந்தனர். அன்று எமது மாணாக்கரது ஆங்கில வளர்ச்சியும் அதிஉன்னத நிலையினை அடைந்திருந்தது. பின்பு நடந்தது என்ன? அந்நிய கலை, கலாசார வாடை வீசும் புத்தகங்கள் தேவையில்லை என்ற கொள்கை அடிப்படையில், ஒருமுகப்படுத்தப்பட்ட கல்விப்பிரசுரப்பகுதியினர் இன்று நடைமுறையில் உள்ள கல்விப் பிரசுரங்களை தந்துள்ளனர். அவை யாவும் சிங்கள கலாசார மொழி இலக்கியச் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றவை. இதனை ஊர்ஜிதப்செய்யும் வகையில் 29 மார்ச்சு 1985 வீரகேசரி நாளிதழில் ''புதிய 3ம் வகுப்பு ஆங்கில நூல்: தமிழ் முஸ்லிம் பெயர்கள் அகற்றப்பட்டுள்ளன'' எனும் தலையங்கத்தின் கீழ் வெளிவந்த கருத்துக்கள் அமைந்துள்ளன. அவற்றின் ஒரு பகுதி கீழ் வருமாறு:

> ''இலங்கையில் சிங்கள இனத்தவர் மாத்திரமே வசிக்கிறார்கள் எனும் கருத்தும் தமிழர்கள் இந்தியாவில் வசிக்கிறார்கள் எனும் கருத்தும் தொனிக்கும்வகையில் அரசினர் வெளியிட்டுள்ள 3ம் வகுப்புக்கான புதிய ஆங்கில பாடநூல் எழுதப்பட்டுள்ளது. இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த 3ம் வகுப்பு ஆங்கில நூலில் இருந்துவந்த இந்துப் பெயர்கள், இந்துக் கோவில்கள், முஸ்லிம் பெயர்கள். இஸ்லாமியப் பள்ளிகள் ஆகியன புதிய நூலில் அகற்றப்பட்டுள்ளன. இப்படி அகற்றுவதன் மூலம் சிங்களவர் மாத்திரமே இலங்கையில் வசிக்கிறார்கள்எனும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இப் புதிய ஆங்கில பாடநூலைக் கண்ணுற்ற இப்பகுதிப் பெற்றோரும் ஆசிரியரும் பெரும் வியப்புற்றுள்ளனர்.''

இரண்டாம் இடம்

மேலே கூறப்பட்ட காரணங்களின் பின்னணியில் இன்று ஆங்கில மொழியினைக் கற்கும் தமிழ் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் உற்சாகம் குன்றி ஒருவித விரக்திநிலையை அடைந்துள்ளனர். ஆங்கிலம் விருப்பமற்ற ஒரு பாடமாக அமைந்துவிட்டது. இந்நிலையை மேலும் ஊக்குவிக்கும் செயலாக 1956ம் ஆண்டில் இருந்து சுயபாஷை கல்வி போதனாமுறை நடைமுறைக்கு வந்தது. இதனால் முதலாம் இடத்தை வகித்துவந்த ஆங்கில மொழி [First Language] இரண்டாம் இடத்தை [Second Language] அடைந்துள்ளது. இன்று எல்லாப் பாடங்களும் தாய்மொழியில் போதிக்கப்படுகின்றன. ஆகவே ஆங்கில மொழியைப் பேச, வாசிக்கவுள்ள சந்தர்ப்பம் ஒருநாளைக்கு 40 நிமிடங்கள் என அடைக்கப்பட்டுவிட்டது. இம் மாறுபட்ட சூழ்நிலைதான் தமிழ் மாணவரின் ஆங்கில மொழித் தரம் குறைவதற்குக்காரணம். மேலும் இன்று ஒரு தமிழ் மாணவன் ஆங்கில அறிவு இன்றியே ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழகம்வரை சென்று பட்டப் படிப்பை முடிக்கக்கூடியதாவுள்ளது. இதனை உணராதவர்கள்தான் வீணே மாணவர்களின் ஆங்கிலத் திறமையின்மையையும் ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசிரியத் திறமையின்மையையும் எள்ளிநகையாடுகின்றார்கள்.

சர்வதேச மொழி

மொழியியலாளரின் ஆராய்ச்சிப்படி தாய்மொழி மூலம் கற்பிப்பதே ஆரம்பகாலங்களில் மிகவும்சிறந்தது. ஆனால் மேற்படிப்புக்குச் செல்லுமிடத்து சர்வதேச மொழியான ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளலாம். அதாவது வேறு எந்த மொழிக்கும் இல்லாத ஒரு தனித்துவம் ஆங்கில மொழிக்கு எக்காரணத்தாலோ அமைந்துவிட்டது. ஏழுநாடுகளில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வசிக்கின்றனர். இருபதுக்கு மேற்பட்ட நாடுகளில் ஆங்கிலம் நிர்வாகமொழியாக உள்ளது சர்வதேச விமான சேவை ஆங்கிலத்தையே தொடர்பு மொழியாக ஏற்றுள்ளது மேலும்விஞ்ஞானம், தொழில் நுட்பம், சர்வதேச வியாபாரம் போன்ற நிலைகளும் ஆங்கிலத்தையே ஏற்றுள்ளன.

இன்று தமிழ்பேசும்மக்களைப் பொறுத்தவரை மாணவரும், பெற்றோரும் ஓரளவுக்கு ஆங்கில மொழியின் தேவையை உணர்ந்துள்ளனர். இது வரவேற்கத்தக்கது. பணவசதி படைத்தவர்கள் மேற்படிப்புக்கு இந்தியா செல்ல விரும்புவதும், அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்வி, வேலைவாய்ப்புக்களை நாடுவதும் ஆங்கில மொழியின் தேவையை எமக்கு உணர்த்தியுள்ளது. இத்தேவையைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கமோ, ஆங்கில ஆசிரியர்களோ நாட்டின், அரசியல்நிலையோ உகந்ததாக இல்லை.

முதலாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்கும் குறுகிய காலத்தில் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்கும் ஏராளமான போதனா முரண்பாடுகள் உள. இம் முரண்பாடுகள் குறுக்கே வரும்போதுதான் எமது மாணவர்களுக்கு ஆங்கிலம் ஒரு கசப்பானபாடமாக மாறிவிடுகிறது இதனை நீக்குவதற்கு மொழியியல் துறையில் எடுத்துக் காட்டாகஉள்ள ஒரு பேருண்மையாக விளங்குவது தாய் மொழியைப் பிறமொழி போதிப்பதற்குத் தாராளமாகப் பாவித்தல் ஆகும். இத்திட்டத்தில் முக்கிய கவனிப்புயாதெனில் ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் உள்ள திணை, பால், எண் போன்ற இலக்கண அமைப்புக்களை ஒப்பீடுசெய்தல் ஆகும்.

இலக்கண வேறுபாடு

ஆனால் ஆங்கில இலக்கணத்தினைத் தமிழில் மொழிபெயர்க்காமல், அதன் அமைப்பைச் சிதைக்காமல்கற்பிப்பதே அனுபவரீதியாக நான் கண்ட உண்மை. அதாவது தமிழ் மூலம் ஆங்கிலம் போதித்தல் என்பதல்ல. இதனை வலுவூட்டக் கீழ்வரும் சிறு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

தனி ஆங்கில, தமிழ் வாக்கியங்களை ஒப்பிடும்போது தமிழ் வாக்கியம் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை எனும் ஒழுங்கமைப்பைக் கொண்டுள்ளது. ஆங்கில வாக்கியமோ எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என அமைகிறது.

விளக்கம்

ராமன்
Subject
மாம்பழம்
Object
சாப்பிடுகிறான்
Verb
RAMAN
Subject
EATS
Verb
A MANGO
Object

இவ்வமைப்பு வித்தியாசத்தை உணராதவிடத்துத் தனது தாய்மொழியில் சிந்திக்கும் மாணவன் ஆங்கிலத்தில் அதனைப் பிரயோகிக்கும்போது தாய்மொழி இலக்கிய அமைப்பையே கையாளுகிறான். மேலும், எமது தொன்மையான தமிழ் மொழியிலுள்ள திணை, பால், எண் அமைப்புக்கள் ஆங்கில மொழியில் சில கட்டங்களில் தோன்றாது போய்விடுகிறது.

உ+ம்; ஆக

He Came, She Came, It Came என்ற வசனங்களில் Came என்ற இறந்தகால ஆங்கிலப்பதம் பால் வித்தியாசம் காட்டாது அமைந்துள்ளது. தமிழ் மொழியிலோ அவன் வந்தான், அவள் வந்தாள், அது வந்தது என்றவாறு அமைந்துள்ளது. மேலும், நிகழ்கால அமைப்புக்களில் ஆங்கிலத்திற்கும் தமிழிற்கும் வேறுபாடு உள்ளது. நாளாந்தம் செய்யும் அலுவல்களையும் நேர்முக வர்ணனைகளையும் தமிழில் நிகழ்காலத்தில் பாவிக்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் இரு வேறுபட்ட நிலைகளாக Present Tense, Present Continuous Tense ஆக அமைந்துள்ளது. இவை சில ஒப்பீடுகள் ஆகும். ஆகவே எமது மாணவர்கள் ஆங்கில அறிவில் சிறந்து விளங்க வேண்டும் எனின். கற்பிக்கும் ஆசிரியன் இருமொழிகளிலும் சிறந்த அறிவுள்ளவனாகவும் மொழி இலக்கண வேறுபாடுகளை உணர்த்தி இயல்பாகப் படிப்பித்தலில் ஆர்வம் மிக்கவனாகவும் இருத்தல் அவசியம்.

★ இன்று கன்றுதிட்டி
அருள்மிகு காளியம்பாள் 7-ம் திருவிழா.
அழியாமுத்தி ஆனந்தமே

நின்றும் இருந்தும் கிடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே!
மகோற்சவம் சிறப்புற அன்னையைப்
பிரார்த்திக்கின்றோம்.

மே (F) பெயர் அக்கடமி
மே (F) பெயர் வீடியோ ஹோம்
மே (F) பெயர் மினி சினிமா

108, கன்றுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

பெற்றோரின் நம்பிக்கையைப் பெற்றுவரும்
(B) பேபி ஓ- டி- கொலோன்

WHITEFIELD'S
BABY COLOGNE

இது வைற் (F) பீல்ட் இன்டஸ்ரீஸின் ஒரு தரமான
தயாரிப்பு.
எங்கும் விற்பனையாகின்றது.
வாங்கும் பொழுது வைற் (F) பீல்ட்ஸ்
(B) பேபி கொலோன் என்று கேட்டுவாங்குங்கள்.

மொத்தமாக விற்கும் நிலையங்கள்:-
★ சிற்றி மெடிக்கல்ஸ்- ஆஸ்பத்திரி வீதி.
★ என். எம். எஸ்.- நவீனசந்தை.
★ லக்க்ஷ்மிநாதன்- தெல்லிப்பழை.

Whitefield Industries

DE VOS AVENUE,
COLOMBO- 4.

VALLAI ROAD.
CHANKANAI.

எமது சிறுகதை

மாசீதனற்ற மருமகள்

-பாமா ராஜேந்திரம்-

ராஜன் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். தூக்கம் கலைந்திருந்தாலும் அவன் எழ முயற்சிக்கவில்லை. தாயாரின் அதிகாரம் தொனித்த குரல் அந்த அதிகாலை வேளையிலும் 'கணீர்' என ஒலித்துக்கொண்டிருந்தது. ''ஏன் தான் இந்த அம்மா ஒண்டும் இல்லாத விஷயத்துக்கு இப்படிச் சத்தம் போடுறுவோ'' என ராஜன் தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டான். எனினும் வெளியே சொல்ல முயற்சிக்கவே இல்லை. காலடியோசை கேட்டு நிமிர்ந்தான் ராஜன். அந்த வீட்டில் அப்படித்தைரியமாக நடக்க அவன் தாயால் மட்டும் தான் முடியும்.

''ராஜன் ராஜன் எழும்பு இண்டைக்கு அங்கை போறதை மறந்திட்டியே'' அவனின் தலையைக் கோதியவாறு அன்புடன் கேட்டாள் தாய்.

''அம்மா எனக்கெண்டால் பொம்பிளை பார்த்துப்பார்த்து அலுத்துப்போச்சு. இப்ப எனக்குகல்யாணம் செய்யிற எண்ணமே மறைஞ்சுகொண்டு வருகுது''-ராஜன் அலுத்துக் கொண்டான்.

''இஞ்சை பார் ராஜன் நீ ஒரு எஞ்ஜினியர், அதுவும் லண்டனில். உனக்குப் பார்க்கிற பொம்பிளை ஒரு ஸ்டாண்டட்டாக இருக்க வேண்டாமோ? சீதனம் இல்லாமல் நீ கல்யாணம் செய்தால் உனக்கு மட்டுமில்லை, எனக்கும் மரியாதை இல்லை. அது மட்டும் இல்லை நீ ஏதோ லண்டனில் பிழையாக நடந்த மாதிரியும் பொம்பிளை இல்லாமல் நான் பொம்பிளை எடுத்தமாதிரியும் இருக்கக் கூடாது'' - தன் மன ஆசையைச்சொல்லித் தீர்த்த தாயின் அருகே எழுந்து அமர்ந்து கொண்டான் ராஜன்.

''அம்மா நீங்கள் சீதனம் வேணுங்கோ'' அதுகூடப் பரவாயில்லை. ஆனால் மூண்டு லட்சம் நாலு லட்சம் எண்டு கேட்கிறதுநியாயமே? மூண்டுநாலு லட்சம்குடுத்து என்னைக் கல்யாணம் செய்யிறதை விட அந்தக் காசை பாங்கில்போட்டு வட்டியைச்சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறது எவ்வளவோ மேல் எண்டு தான் சொல்லுவன்'' ராஜன் தன் மன உணர்வுகளை வெளிக்காட்ட முயன்று கொண்டு இருந்தான்.

''வேணும் எண்டால் நீ இருந்து பார் ராஜன், உனக்கு நாலு லட்சம் வாங்கி நல்ல இடத்தில் கல்யாணம் செய்து வைக்கிறனா இல்லையாஎண்டு'' தாயின் குரலில் தொனித்த உறுதி ராஜனுக்குப் புரிந்தது.

ராஜனும் லண்டனில் இன்ஜினியராகக் கடமையேற்று ஆறு வருடம் ஆகிறது. அவனும் இரண்டு வருடத்துக்கு ஒரு முறை தன் தாயைப் பார்க்க இலங்கை வருகிறான். அவன் இலங்கைக்கு வரும் ஒவ்வொரு முறையும் தாயாரும் பேசாத திருமணங்கள் இல்லை. அவன் லீவில் வரும் அந்த மாதத்தில் குறைந்தது 15 திருமணங்களாவது பேசி முடியில் ஒன்றுமே ஒப்பேறுமல் போக அவனின் லீவும் முடிந்து லண்டனுக்குப் போக நாளும் சரியாக இருக்கும். இந்த ஆறு வருட காலங்களிலும் லீவு வீணாக இப்படியே கடந்து இருக்கிறது. இம்முறை மீண்டும் லீவில் வந்திருக்கிறான்.

ராஜனும் பல முறை நினைத்திருக்கிறான். திருமணம் என்ற உறவின் மூலம் அம்மாவுக்கு மகிழ்ச்சியை அளிக்க வேண்டும் என்று. அவனது நினைவு வெறும் கற்பனையாகவே இன்னும் இருக்கிறது.

''என்ன ராஜன், யோசிச்சுக் கொண்டு இருக்கிறாய்!'' அம்மாவின் குரல் அவனது சிந்தனையைக் கலைத்து நின்றது. ''என்ன அம்மா'' என்றவாறு தலையை நிமிர்த்தினான் ராஜன்.

''இப்ப நேரம் என்ன தெரியுமே? எட்டுமணி, ஒன்பது மணிக்குப் பொம்பிளை பார்க்க வாறம் எண்டு போட்டு இப்பிடி இருந்தால் எப்பிடி. கெதியாக் குளிச்சுப்போட்டு வெளிக்கிடு ராஜன்.''

தாயின் கட்டளையை ஏற்றவனாக எழுந்து சென்று பாத்ரூமில் நுழைந்து கொண்ட ராஜன், அந்தக் காலைக் குளிரையும் பொருட்படுத்தாமல் 'சவரி'ன் கீழ் நின்று தன்னை நனைத்துக்கொண்டு வெளியேறினான்.

''என்ன ராஜன், வெளிக்கிட்டுப்போட்டியே'' என்று கேட்டவாறு கொண்டையைச் சரி செய்து கொண்டு வந்த தாயைப் பார்த்தவாறு ' ஓம் அம்மா'' என்றவன், மௌனமாகக் காரை நோக்கி நடந்தான். தன் நாகரிக, மோக அலங்காரத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய பெண்ணையே அம்மா தேடுகிறாள் என்பது ராஜனுக்குப் புரிகிறது. ஆனால் புறத்தோற்றத்தில் அழகாகஎத்தனை போலிகள் உலாவுகின்றன என்பது ஏன் அம்மாவுக்குப் புரியவில்லை என்பதுதான் ராஜனுக்கும் புரியவில்லை.

சம்பிரதாய பூர்வமான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன. ''பெண்ணை வரச் சொல்லுங்கள்'' என்ற தாயாரின் குரல்கேட்டு நிமிர்ந்தான் ராஜன். கையில் குளிர்பானத்துடன் வந்த பெண்ணை நிமிர்ந்துபார்த்தான் ராஜன். அவன் சலனப்பட இது முதற் தடவையல்லவே. அவன் பார்வையில் ஆசையோ, எதிர்பார்ப்போ பிறக்கவில்லை. மாறாக வெறும் போலியான கடமையுணர்வைத் தவிர வேறு ஏதும் அவன் உள்ளத்தில் தோன்றவில்லை. நிமிர்ந்த நேர்கொண்ட கூரிய பார்வையையுடைய அழகிய பெண். நீண்ட கூந்தல், பார்த்தவர்களை மீண்டும் பார்க்கத் தூண்டும் குறுகுறுத்தவிழிகள், என்னதான் இருந்தாலும் அவனின் தாயாருக்குப் பெண்ணை பிடித்து இருந்தால் அவனுக்குப் பிடித்தமாதிரித்தான். ''பெண்ணைப் பிடிச்சிருக்கே தம்பி?'' வெளிப்படையாகப் பெண்ணைப் பெற்றவர் கேட்கிறார் ராஜனுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் தாயை நிமிர்ந்து பார்த்தான். ''எனக்குப் பெண்ணைப் பிடிச்சிருக்கு'' என்று தனது அற்ப விருப்பத்தைத் தெரிவித்து ஒரு இளம் பெண்ணின் இதயத்தில் ஆசை விதைகளைத் தூவி அவை வளரத் தானும் உடந்தையாக இருக்கக்கூடாது என மிகக் கவனமாக இருந்தான் ராஜன்

''மகளுக்கு இங்கிலிஷ் கதைக்கத் தெரியுமே?'' தாயின் கேள்வி பெண் வீட்டாரைக் காட்டிலும் ராஜனை வேகமாகத் தாக்கியது. ''நல்லாத் தெரியும்'' பெண்ணின் தந்தை பெருமையுடன் தெரிவித்துக் கொண்டார். ராஜனின் உள்ளத்தில் சிறு நிம்மதி பிறந்தது ஆனால் அந்த நிம்மதி சில நொடிகளிலேயே சிதைந்து போனபோது ''பொம்பிளையின்ட தாய்க்கு இங்கிலிஷ் கதைக்கத் தெரியுமே'' என்று தாயே மற்றுமொரு கேள்வியைக் கேட்டபோது ராஜன் இடிந்து போனான் அவனுக்குத் தாய் மீது ஆத்திரம் கூட வந்தது

''தெரியாது'' பெண்ணின் தந்தை ஒரு தயக்கத்துடன் சொன்னார்

''வீட்டை போய் முடிவைச் சொல்லி அனுப்புறன்'' என்று எழுந்த தாயோடு ராஜனும் எழுந்து மௌனமாக நடந்தான்.

''ராஜன் பொம்பிளை பிடிச்சிருந்தாலும் பொம்பிளையின்ட தாய்க்கு எல்லே இங்கிலிஷ் தெரியாது. பிறகு எப்படிக் கல்யாணம் செய்யிறது? சீதனத்தில கொஞ்சம் குறைஞ்சாலும் செய்யலாம். இது கௌரவக் குறைவு. அதைவிட அவையின்ட இனசனம் அவ்வளவு ஸ்டைலாகவும் இல்லை. நீ ஒரு இஞ்சினியர். உன்னைத் தேடி எத்தனை சனங்கள்வரும். இப்பிடியான சனங்களோடை எப்படிக் காலம் தள்ளுவாய். அதையெல்லாம் யோசித்துத் தான் இந்தக் கலியாணத்தில உனக்கு விருப்பம் இல்லை எண்டு சொல்லி அனுப்பிப் போட்டன்'' என்று தாயார் சொன்ன போது, ராஜன் திகைத்துப் போனான்.

''அம்மா, நான் கல்யாணம் செய்து வாழப்போறது அந்தப் பொட்டையோட தவிர அவையின்ட இனசனத்தோடையோ தாயோடையோ இல்லை'' - ராஜன் முடிவாகக் கூறிவிட்டு எழுந்து நடந்தான்.

''ராஜன் இந்த முறையும் உனக்குக் கல்யாணம் சரிவரயில்லை இன்னும் இரண்டு வருஷம் செல்லும் நீ வர, அதுக்கிடையில நான் எப்படியும் ஒரு நல்ல இடத்தில பொம்பிள்ளை பார்த்து முற்றாக்கிப்போடுறன்'' தன் பல்லவியைப் பாடினாள்

''ஆறு வருஷம் லீவுக்கு வந்து பொம்பிளை பார்த்தே காலம் கழிஞ்சு போச்சுது. என்ட சிநேகிதர்கள் கூட என்னை ஊருக்கு போறியே எண்டு இப்ப கேட்கிறதில்லை. பொம்பிளை பார்க்கப் போகயில்லையே எண்டு தான் நக்கல் அடிக்கிறவங்கள்'' என்ற ராஜன், வேதனையோடு மெதுவாகச் சிரித்தான்.

ராஜன் லண்டன் சென்று விட்டான்.

ஆறு மாதங்கள் ஓடிமறைந்தன. காலைவேளை கார் சத்தம் கேட்டு வாசல் பக்கம் எட்டிப் பார்த்தாள். ராஜனின் தாய். ''ராஜன் நீயே'' ஆச்சரியப் பட்டுச் சிலையாக நின்ற தாயே மீண்டும் தொடர்ந்தாள். 'ஒரு லெட்டர் எண்டாலும் வாறன் எண்டு போட்டு இருக்கக்கூடாதே.'' மகிழ்ச்சியில் திக்குமுக்காடிய தாய்மனம். ஆனால் தாயின் அந்தப் பார்வை ராஜனைத் தொடர்ந்து பின்னால் இறங்கிய வெள்ளைக்காரிஜெனியைக் கண்டதும் ஆச்சரியமாக மாறியது, ''யார் இவள் ராஜன்'' என்பது போல.

''என்ன அம்மா, யார் இவள் எண்டு தானே ஆச்சரியமாகப்பார்க்கிறீங்கள். வேற யாரும் இல்லை. உங்கட மருமகள் தான் பெயர்ஜெனி இவள் நல்லா இங்கிலிஷ்கதைப்பாள். இவளை விட இவளின்ர தாய் இன்னும் நல்லா இங்கிலிஷ் கதைப்பார். ஏன் இவளின்ர குடும்பம், பரம்பரையே இங்கிலிஷ் கதைக்கும், இது உங்களுக்குப்பிடிக்கும்எண்டு நினைக்கிறேன்.'' என்ற ராஜன், ஜெனியின் கையைப் பற்றிக் கொண்டு உள்ளே நடப்பதை சிலையாகப் பார்த்து நின்றாள் அந்தத் தாய்.

(யாவும்கற்பனை)

ஆதவனை நிகர்க்கும்

கொடும் பகையைச் சுட்டெரிக்கும்
நீதி ஒளி வீசி
நெடுந் தீவான் நோக்கிக்
கிளர்ந்து எழும் ஓர்நாள்
கடுந்தவ மியற்று முனி
கண்ட பரம் பொருளாய்
தொடும்நீதி விரைந் தெங்கள்
தொல்புகழும் மீளும்

விடம்கொடிய நெஞ்சுமனம்
வீழ்த்தியுடல் தீய்க்கும்
தடம்புரளும் அரக்க குணம்

தான் சாம்பராக் கும்
திடம் கொண்ட நெடுந்தீ
வான் நோக்கிச் சீறின்
புடம்போட்ட தங்கமெனப்
புகழ் பூக்கும் தமிழும்

ஏற்றமிகு சிந்தனைகள்
எங்கெங்கும் மிளிர
நாற்றிசையும் நெடுந்தீ
வான் பரந்து ஒளிரும்
போற்று தமிழ்த் தாயவளின்
பொன் முடியை மீட்கும்
ஆற்றலிலே அதன் பணிகள்
ஆதவனை நிகர்க்கும்

—நெடுந்தீவு லக்ஸ்மன்

மறுபிறப்புபற்றி

பாரதி

''இறந்துபோன பிறகு மறுபிறவி உண்டா?'' என்று பாரதியாரிடம் ஒருவர் கேட்டார். அதற்குப் பாரதியார் கூறுகிறார்:

''மனோதைரியமில்லாத பேடிகள் புழுக்களாகப் பிறப்பார்கள். பிறர் துன்பங்களை உணராமல் தமது இன்பத்தையே பெரிதாக நினைப்பவர்கள் பன்றிகளாகப்பிறப்பார்கள். தாய்மொழியைக் கற்றுக் கொள்ளாதவர்கள் குரங்குகளாகப் பிறப்பார்கள். சோம்பேறிகள் எருமைகளாகப் பிறப்பார்கள். நீதி தவறுபவர்கள் தேள் ஆகவும், பிறரை அடிமையாக நடத்துபவர்கள் கழுதைகளாகவும் பிறப்பார்கள். பெண்களைக் கெடுப்பவர்கள் அலிகள் ஆகப் பிறப்பார்கள். இரக்கமில்லாதவர்கள் குருடர்களாகப் பிறப்பார்கள். தான் கற்ற கல்வியைப் பிறருக்குக் கற்றுக்கொடாதவர்கள் ஊமைகளாகப் பிறப்பார்கள்.

அச்சமுடையவர்கள் ஆந்தைகளாகப் பிறப்பார்கள். மனோதைரியமும், உண்மையான தெய்வபக்தியுமுள்ள ஒருவன் இந்த ஜென்மத்திலேயே தேவநிலையை அடைந்து விடுவான். வெற்றி அவனைத் தேடிவரும்''

நன்றி: மங்கை

அவதி

நீளவகிடெடுத்து
நீள்விழியில் மையிட்டு
ஆள் மயக்கும்
ஆடை அணிந்து
ஆரணங்கு
அவதிப்பட்டாள்!
ஏனும்...?
பூஜைக்கு நேரம் போச்சாம்.

– குமார் தனபால்

வயல்களெல்லாம் காத்திருக்கு

வயல்களெல்லாம்
காத்திருக்கு...
உன் வரவைப் பார்த்திருக்கு
வட்டமிடும் மேகமெல்லாம்
வானத்தில் விளையாட
வெட்ட வெளியெங்குமே
வசந்தமகள் விளையாட

வயல்களெல்லாம்
காத்திருக்கு
உன் வரவைப் பார்த்திருக்கு
ஆடிவரும் ஆடிமகள்
கோடிவிதை கொட்டித்தர
கூடி நிற்கும்
முகில்களெல்லாம்
ஓடிவந்து சங்கூத

வயல்களெல்லாம்
காத்திருக்கு
உன் வரவைப் பார்த்திருக்கு
ஏர்களெல்லாம்
எழுந்து நின்று
உதயகீதம் பாடிவர
பூமியின் பரப்பிலெல்லாம்
ஒரு புதியராகம் ஓடிவர

அ. தத்வசுதன்

இராஜராஜசோழப் பேரரசன் –6

க.சி.குலரத்தினம்

ஆற்றூர்த்துஞ்சிய அரிஞ்சயன்

கடவுட் பணிசெய்து நரைகண்ட கண்டராதித்தர்மறைந்ததும் அவர் தம் அருமை மைந்தன் மதுராந்தகனே பட்டத்துக்கு வரவேண்டியவன். ஆனால் அவன் குழந்தையாய் இருந்த காரணத்தினால், முன்னரே இளவரசுப்பட்டம் பெற்றிருந்த சிற்றப்பன் அரிஞ்சயன் 956-957இல் அரசனானான். அரிஞ்சயனுக்கு அருந்தமன் என்றும் அரிகுலகேசரி என்றும் பெயர்கள் வழங்கின. அவன் பெருவீரனாய் இளமையிலேயே தந்தை பராந்தகன் கட்டளையை மேற்கொண்டு படை நடத்திச்சென்று வடக்கில் அண்ணன் இராசாதித்தனுக்கு உதவியாய்ப் பக்கபலமாய் நின்று புகழ்பெற்றவன்.

''அரிஞ்சயனுக்கு உத்தமசீலி என்னும் அருமைத்தம்பியும்; வீரமாதேவி. அநுபமா என்னும் இரு சகோதரிகளும் இருந்தனர். வீரமாதேவி இராட்டிரகூடத்து நான்காம் கோவிந்தன் என்பானைத்திருமணஞ் செய்திருந்தவள். அநு''மா கொடும்பாளூர்ச் சிற்றரசன் பூதி விக்கிரமகேசரி என்பானை மணந்திருந்தவள்''. இவ்வாறு வரலாற்றாசிரியர் சிலர் எழுதியுள்ளனர்.

அரிஞ்சயன் பரகேசரி என்னும் பாரம்பரியப்பட்டம் பெற்றிருந்தவன். அவன்முதற் பராந்தகசோழனுக்கும் அவன் மனைவியருள் ஒருத்தியாய கேரளமன்னன் பழுவேட்டரசன் மகளுக்கும் பிறந்தவன்.

கண்டராதித்தர் ஆட்சிக்காலத்திலேயே சோழநாடு மாத்திரம் இவருக்காய் இருந்தது. வடக்கில் வேறு சிலர் அதிகாரம் பெற்றிருந்தனர். தெற்கில் பாண்டியர் சோழர் அதிகாரத்தை மீறி, திறை கொடாதிருந்தனர்.

வடக்கில் தொண்டைமண்டலத்தில் ஒரு பெரும் கலகம் உண்டாயது; அரசனை அரிஞ்சயன் அதனை அடக்குவதற்கு படையொடு சென்று அருஞ்சமர்புரிந்தபோது, தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியிருந்த இராட்டிரகூட மன்னனான கன்னரதேவனும் கடும்போர் புரிய வேண்டியவனானான். இப்போர் ஆற்றூர் என்னும் இடத்தில்நிகழ்ந்தபோது அரிஞ்சயன் வீரமரணம் எய்தினான். இதனால் இவனுக்கு ''ஆற்றூர்த் துஞ்சியதேவன்'' என்னும் பட்டம் கிடைத்தது.

அரிஞ்சயனுக்கு வீமன் குந்தவை, ஆதித்தன் கோதைப் பிராட்டி, வைதும்ப மன்னன் மகள் கல்யாணி, பூதி ஆதித்த பிடாரி என மனைவியர் நால்வர் இருந்தனர். இவர்களுள் கல்யாணி என்பாள் வயிற்றிற் பிறந்த மைந்தனுக்கு பரம்பரைப் பெயரான பராந்தகன் என்னும் பெயரை வழங்கினர்.

சுந்தரசோழன்

அரிஞ்சயன் இறந்ததும் அவனுடைய அருமைமகன் பராந்தகன் 957இல் இரண்டாம் பராந்தகன் என்னும் பெயரில் அரசனானான். இவன் புனைந்த பட்டம் இராசகேசரி என்பதாகும். இராசகேசரி இரண்டாம் பராந்தகன் சோழமன்னர்களுள் செந்நிறமும் அழகிய தோற்றமும் உடையவனாய் இருந்தமையால் எல்லோரும் அவனைச்சுந்தரசோழன் என்றே வழங்கினர்கள் அவனுக்குச் சுந்தரசோழன் என்னும் பெயரே வழங்குவதாயிற்று. இது செப்பேடுகளிலும் வருவதாயிற்று.

சுந்தரசோழன் அரசகாரியங்களில் தனக்கு உதவியாய் இருக்குமாறு தன் மூத்த மைந்தன் கரிகாலன் என்னும்ஆதித்தனை நியமித்திருந்தான். அவன் காலத்தில் அங்குமிங்குமாகப் பல போர்கள் செய்யவேண்டிய நிலைமை உண்டாயிற்று.

பாண்டி நாட்டில் வீரபாண்டியன் என்பான் சோழப்பேரரசனை மதிக்காமல் அரசு செய்யவே, சுந்தரசோழன் பாண்டி நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று, சேவூர்என்னும்இடத்தில் பாண்டியனுடன் கடுஞ்சமர் புரிந்து பெரு வெற்றி பெற்றான். இதனால் அவனுக்கு ''மதுரை கொண்டவன்'' என்றும், ''பாண்டியன் சுரமிறக்கியவன்'' என்னும் பட்டப் பெயர்கள்வழங்குவனவாயின. பாண்டியன் மீண்டும் தலையெடுத்துச் செருக்குற்றபோது ஆதித்தகரிகாலன் தலைமையிற் சென்ற படை பாண்டியரை முற்றாக வென்றது.

ஆதித்த கரிகாலனுக்கு ''வீரபாண்டியன் தலை கொண்டவன்'' என்றும், ''வீரபாண்டியனை எறிந்து தலைகொண்டவன்'' என்றும் சிறப்புஉண்டாயின. பாண்டியருடன் சோழர் செய்த போரில் பேருதவியாய் நின்றவன் பூதி விக்கிரமகேசரி என்பவனாவான்.

இப்பெரும் போரில் பாண்டியருக்குப் படைத்துணையாக நின்றவர்களுள் இலங்கையரசன் நான்காம் மகிந்தன் குறிப்பிட வேண்டியவனாவன். இலங்கையரசன் மகிந்தனைத் தண்டிப்பதற்காகச் சுந்தரசோழன் தன் நண்பன் கொடும்பாளூர் குறுநிலமன்னன் பராந்தகன் சிறிய வேளாளன் என்னும் சிறப்புப் பெற்ற பூதிவிக்கிரமகேசரியையே படைத்தலைவனாக்கினான். இப்போரில் எதிர்பாராதவிதமாக இப்படைத்தலைவன் உயிர்துறக்க நேர்ந்தது.

பாண்டியர் மீண்டும் போர்க்கோலம் கொண்டதும் சுந்தரசோழன் தன் மூத்தமைந்தன் ஆதித்த கரிகாலனையே படையெடுத்துச் செல்லுமாறுபணித்தான் ஆதித்தனுக்கு இலங்கைப் போரில், ''கடல் அடையாது இலங்கை கொண்ட சோழன்'' என்னும் சிறப்பு விருது வழங்கலாயிற்று.

வடக்கில் தொண்டை மண்டலம் கன்னரதேவன் ஆட்சியிலேயே இருந்தது சுந்தரசோழன் அவனை வென்று மீண்டும் அந்த நாட்டைச் சோழவரசில் சேர்த்துக்கொண்டதோடு, அப்பிரதேசத்தை அடக்கி ஆள்வதற்கு ஆதித்த கரிகாலனே தகுதியானவன் எனக்கருதி, அவனுக்குப் ''பார்த்திவேந்திரவர்மன்'' என்னும் பட்டஞ் சூட்டித் தொண்டைநாட்டுக்கு ஆள்பதியாக்கினான்.

இவ்வாறாக நாட்டின் ஒருமூலையில் சதி உருவாகியது. அதனால் 969ஆம் ஆண்டில் ஆதித்தன் அந்தரங்கமாகக் கொலைசெய்யப்பட்டான். அதுவும் அரண்மனையிலேயே உயிர்துறக்கநேர்ந்தது. இச்சதியைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கற்பனை செய்ததும் உண்டு. பிற்காலத்தவர் கதை எழுதியதும் உண்டு. அக்காலத்து விசாரணையில், அந்தணர்களான சகோதரர்கள் நால்வர் ஒருங்கு கூடி ஆதித்தனை இரகசியமாகக் கொன்றனர் என்னும் செய்தி வெளியானதும் உண்டு. அவர்களின் திருநாமங்கள் உலகறிந்ததும் உண்டு. அவர்கள் சோமன், ரவிதாசனை பஞ்சவன் பிரமாதிராயன், பரமேசுவரனை இருமுடிச் சோழபிரமாதிராயன். மலையனூரானை ரேவதாசக்கிரமவித்தன் என்பவர்களாவர் என்கிறதுசிதம்பரம்உடையார் குடிக்கல்வெட்டு.

ஆதித்தன் அகாலமரணமடைந்தமை சுந்தரசோழனைப் பெரிதும் வாட்டியது. அவன் நோயுற்று அந்த ஆண்டிலேயே இறந்தான். அவனைப் ''பொன் மாளிகையில் துஞ்சினதேவன்'' என வழங்குவர். அவன் பிரிவைத் தாங்கமாட்டாத அவன் மனைவி வானவன் மாதேவி என்பாள் தன் மைந்தனின் எதிர்காலத்தையும் நினையாமல் கணவனுடன் கட்டையேறினள், தலைமகள் பிரியாத் தையல் ஆகினள்.

சுந்தரசோழனின் ஆட்சி மங்கலங்கள் பொங்க மகிழ்ச்சிகரமாக நடைபெற்றதும் உண்டு. அவன் காலத்தில் சிவசிவ என்பதும், அரஹர வென்பதுமே எங்கும்கேட்டன என்பர். அவனுக்கு அமைச்சனாய் இருந்தவன் மழநாட்டுப் பிரமராயன் என்பவனாவன்.

சுந்தரசோழன் பெயரால் வடவார்க்காட்டில் சுந்தரசோழப்பேரேரி, புதுக்கோட்டையில் சுந்தரசோழபுரம், தென்னார்க்காட்டில் சுந்தரப்பெரும்பள்ளி என்னும் புத்தர் பள்ளி முதலியன சிறப்பொடு நிலவின.

சுந்தரசோழன் பழையாறு என்னும் இடத்தில் தலைமை அலுவலகம் அமைத்தவன் என்பதற்குப் புலவர்கள் கூற்று ஆதாரமாயுள்ளது. வீரசோழியம் என்னும்இலக்கண நூலின் உரையில் ''பழையாறைநகர்ச் சுந்தரசோழன்'' என்றும், ''மேதகு நந்திபுரி மன்னர்

(8-ம் பக்கம் பார்க்க)

எல்லோரும்

யோசிப்போம்

கல்யாணச் சந்தையிலே
கன்னியர்கள் ஆயிரமாம்
வரனில்லா நிலையொன்று
வரதட்சிணை யொன்றும்
வெளிநாடு சென்றவர்கள்
வெளிக்கிட்டுப்
போனவர்கள்
வெற்றியென்றே
தோற்றுவிட்டு
வெறிச்சோடி
அலைந்தவர்கள்
வேதனையால் மடிந்தவர்கள்
அவமிருத்தால்
அழிந்தவர்கள்
திரும்பிவர மாமாட்டார்கள்
இந்த நிலையொன்று
தேங்கிநிற்கக்
காண்கின்றோம்
கல்யாணம் செய்துவைத்தே
கன்னி மணம் நேர்வதற்கு
சொன்ன சமுதாயம்
சுருண்டு கிடக்குதந்தோ
என்ன வழியென்று
எல்லோரும் யோசிப்போம்

—முருக வே. பரமநாதன்

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக

யாழ்ப்பாணக் கிளை

சைவசித்தாந்த நூற்புதிப்புக்கழகம் யாழ்ப்பாணத்தில் கிளை ஒன்றைத் திறப்பதற்காக தமிழ் நாட்டின் முன்னணி அறிஞரில் ஒருவரும் மறைமலை அடிகள் நூலகரும் கழக ஆட்சியாளரும் ஆகிய இரா. முத்துக்குமாரசுவாமி M. A., B. Litt. அவர்கள் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

தற்போது விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்திருக்கும் தஞ்சைப் பல்கலைக்கழகச் சிறப்பாய்வாளர் பண்டிதர் க. வீரகத்தி அவர்கள் இதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்கொண்டுள்ளார். இவ்வாறு ஒரு கிளையை நிறுவுமிடத்து ஈழத்தமிழ் அறிஞர்களின் படைப்புக்கள் அதிக அளவில் வெளிவரவும் தமிழ்நாட்டு நூல்களை எளிதில் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

நினைவில் நிறைந்த அரசியலார்சிலர்–14

சுந்தரகாண்டம்

இன்னும் முடியவில்லை

எஸ். எம். ஜி.

தனக்குச்சரி எனப்பட்டதை எவருக்கும் அஞ்சாமல் எடுத்துச் சொல்வதில் சுந்தரருக்கு நிகர் இல்லை.

பாராளுமன்ற விவாதத்தில் குறுக்கீடுகளுக்குப் பதிலடி கொடுப்பதிலும் சுந்தரர் சமர்த்தர்.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆந் தேதி சிங்களம் மட்டும் மசோதா மீதான விவாதத்தில் வவுனியா எம். பி. திரு சுந்தரலிங்கம் பேசினார்.

ஒரு கட்டத்தில் ''சுதந்திரம் பற்றி விவாதிப்பதற்கு முன்னதாக அமைச்சரவை இலங்கையிலுள்ள தளங்கள் பற்றி விவாதிக்க வேண்டியிருந்தது'' என்று சுந்தரர் கூறினார்.

பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா குறுக்கிட்டு ''அது முழுக்க உண்மைக்குப் புறம்பானது. நாங்கள் இலங்கையிலுள்ள ராணுவத் தளங்கள் பற்றி விவாதிக்கவில்லை. அது உண்மையே அல்ல'' என்றார்.

சுந்தரர் விடவில்லை பிரதமர் தவறான மறதியுடன் பேசுகிறார் அல்லது தவறாகச் சொல்கிறாரென்று கூறிவிட்டு, இது சம்பந்தமான பதிவுப் புத்தகத்துக்கு ஆள் அனுப்பியிருப்பதாகவும் அது வந்தவுடன் எங்கள் சுதந்திரம் பற்றி முடிவு செய்வதற்கு முன் பாதுகாப்பு உடன்படிக்கை பற்றி முடிவு செய்ய வேண்டியிருந்ததென்பதைநிருபித்துக் காட்டுகிறேன் என்றார்.

இதைத் தொடர்ந்து பிரதமர் பண்டாரநாயக்காவுக்கும் சுந்தரருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் பிரதமர் பண்டாரநாயக்கா சுந்தரத்தைப் பார்த்து ''நீர் ஒரு கோமாளி'' என்றார். உடனே சுந்தரர் பிரதமரைப் பார்த்து ''நீ ஒரு முட்டாள்'' என்றார்.

உடன் அங்கத்தவர்கள் சிலர் குறுக்கிட்டு முட்டாள் என்று கூறிய வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டுமென்று கூறினர்.

பிரதமர் கூறியதை முதலில் வாபஸ் பெறட்டும் என்று பிடிவாதமாகச் சுந்தரர் கூறவும் சபைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த உப சபாநாயகர், பிரதமரும் தாம்கூறியதை வாபஸ் பெறவேண்டும் என்று தீர்ப்புக் கூறிவிட்டார்.

சுந்தரர் பாராளுமன்றத்திலிருந்தாலே கலகலப்பாகத்தானிருக்கும்!

சிங்களம் மட்டும் மசோதா 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் தேதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதை ஆட்சேபித்து இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் பாராளுமன்றக்கட்டிடத்துக்கு முன்பாகக் காலிமுகத்திடலில் அமைதியாகச் சத்தியாக்கிரகம் இருந்தபோது குண்டர்களினால் தாக்கப்பட்டனர். இச் சத்தியாக்கிரகத்தில் திரு. சுந்தரலிங்கமும் கலந்துகொண்டார்.

1956ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து பெருமளவில் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக்கொழும்பு வாழ் தமிழ் மக்கள் கொழும்பு நகரமண்டபத்தில் ஒரு வரவேற்புபசாரமளித்தார்கள்.

கேட் முதலியார் எம். எஸ். காரியப்பர், எம்.எம்.முஸ்தபா, எம். ஈ. எச். முசம்மதலி உட்பட தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் கலந்துகொண்ட இவ்வைபவத்துக்கு வவுனியா எம். பி திரு. சுந்தரலிங்கமும் வந்திருந்தார். பார்வையாளருள் ஒருவராக இருந்த திரு சுந்தரலிங்கத்தை மேடையில் போய் இருக்குமாறும் அவரைப் பேசும்படியும் அங்கு கூடியிருந்தவர்கள் கேட்டுக்கொண்டனர். இதற்கு இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்தவர் சம்மதிக்க வேண்டியேற்பட்டது.

காடுகள் இன்னமும் சுடுகின்றன.

1958ஆம் ஆண்டு மே மாத இறுதியில் வவுனியாவில் இலங்கைத் தமிழ்அரசுக் கட்சியின் ஆண்டுமாநாடுநடைபெற்றது.

பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட பின் நடந்த இம்மாநாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எடுக்கப்படவிருந்தன. இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மட்டக்களப்பிலிருந்து வந்தவர்கள் பொலநறுவையில் வைத்துத் தாக்கப்பட்டனர் இதைத்தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் இனக்கலவரம் பரவியது. நாடெங்கும் கலகம் தலைதூக்கியது எங்கும் பதற்றம்.

வவுனியாவை நோக்கி நீர்ப்பாசன இலாகாவுக்குச் சொந்தமான வாகனங்களில் ஆயுதந்தரித்த காடையர்கள் வந்துகொண்டிருப்பதாக வவுனியாவுக்குத் தகவல் கிடைத்தது. சிலர் வவுனியா எம் பி. திரு. சுந்தரலிங்கத்திடம் சென்று ஆபத்தான நிலைமையைச் சொன்னார்கள்; பயப்படவேண்டாமென்றும் வவுனியா மக்களையும் வவுனியாவில் மாநாடு நடத்தும் தமிழரசுக்கட்சியினரையும் காப்பாற்ற வேண்டுமென்றும் உறுதியுடன் கூறிய சுந்தரர் ''கடவுளே வருவார் காடுகளே சுடும்'' என்று சொன்னார்.

பதவியாவிலிருந்து காடையர்கள் வவுனியாவை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். சுந்தரர் சொன்னபடி கடவுள் வந்தாரோ இல்லையோ காடுகள் சுட்டன; காடையர் திரும்பி ஓடினர்!

[8-ம் பக்கம் பார்க்க]

உங்கள் உள்ளம் திடகாத்திரமானதா?

★ கோகிலா மகேந்திரன்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. எமது உடல் நோயற்றுத் திடகாத்திரமாக இருப்பது ஒரு அமைதியான வாழ்வுக்கு எவ்வளவு முக்கியமோ அதேயளவு எமது 'உள்ளம் திடகாத்திரமாயிருப்பதும் முக்கியமாகும். உடல் திடகாத்திரம் குறைந்து நோய் வாய்ப்படுவதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு உடற்கூற்று வைத்தியர்கள் சுலபமாய் வைத்தியம் செய்திடுவர். ஆனால் உள்ளம் திடகாத்திரம் குறைந்து நோய் வாய்ப்படும் போது ஏற்படும் சிக்கல்கள் அபாயகரமானவை, அவைகளைத் தீர்ப்பதும் கடினமானது.

'டெல்பி' நகரில் அமைந்துள்ள 'அப்பலோ' தெய்வத்தின் கோயில் முகப்பில் 'உன்னை நீ அறி' என்ற வாக்கியம் பொறிக்கப் பட்டுள்ளதாம். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ள உன்னத வாக்கியமும் இதுவே. மனித வாழ்வில் எல்லா வெற்றிகளையும் சந்தோஷங்களையும் ஏற்படுத்தும் 'விதி' இந்த 'உன்னை நீ அறி' தான்.

எங்களை நாங்கள் சரியாக விளங்கிக் கொள்வதற்கு எங்கள் வாழ்க்கை இரண்டு அடிப்படை உந்தல்களுக்கிடையில் போராடிக் கொண்டிருப்பது என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். வாழ்வதற்கான உந்தல் அல்லது உயிரோடு இருப்பதற்கான உந்தல் என்பது ஒன்று. இது நாங்கள் நினைக்கின்ற, பேசுகின்ற, தொழிற்படுகின்ற எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது. இதற்கு எதிராக 'எம்மை அழிக்க முனையும் உந்தல்' ஒன்றும் எம்முள் எப்போதும் வேலை செய்து கொண்டிருப்பது எம்மில் பலருக்குத் தெரியாது.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது தன்னை - தனது முன்னேற்றத்தைத் தானே அழித்துக்கொள்ளாத மனிதன் நூறில் ஒருவனாவது இருக்க மாட்டான என ''நித்திரை விட்டெழு வாழ்'' என்ற தனது புத்தகத்தில் 'டொரத்தியா பிராண்டே' கூறுகிறார்.

இந்தியாவின் புத்தி ஜீவிகளுக்கிடையில் கர்ண பரம்பரையாக ஒரு கதை உலாவுகிறது. பிரம்மா மனிதனைப் படைத்து முடியும் தறுவாயில் அவனுக்குத் திருப்தியையும் முழு மனநிறைவையும் கொடுக்க ஆயத்தமானாராம் அப்போது முழு முதற்கடவுளாகிய சிவபெருமான் பிரம்மாவின் கரங்களைப்பற்றித் தடுத்து விட்டுப் பின்வருமாறு கூறினாராம்.

''இதை மட்டும் நீ அவனுக்குக் கொடுத்தாயானால் தன்னைத்தானே அறிந்துகொள்ளும் மகிழ்வை நீ அவனிடமிருந்து பறித்தவனாவாய்''.

இதைக்கேட்ட பின்னர் பிரம்மா மனிதனுக்கு இவற்றை வழங்கவில்லையாம். தன்னைத்தானே அறிந்து மனநிறைவைப் பெறுவதே மனித வாழ்வின் இலட்சியமாகும் என்பதே இக்கதையின் உட்கருத்தாகும். இதை எவ்வாறு ஒரு மனிதன் அடைகிறான் அல்லது அடைய முயற்சிக்கிறான் என்பதிலேயே அவனது உள்ளத்தின் திடகாத்திரம் அல்லது உள்ளத்து முதிர்ச்சி தங்கியிருக்கிறது.

வெற்றியைநோக்கிச்சென்று கொண்டிருக்கும் பாதையிலே ஏற்படக்கூடிய தற்காலிகமான தோல்விகளைத் தவிர்க்க முடியாதவை என ஒரு உளத் திடகாத்திரமுள்ள மனிதன் புரிந்து கொள்கிறான். ஆகவே இந்தத் தோல்விகளை அவன் மனநிறைவுடன் ஏற்றுக் கொள்கிறான். 'ரெனிசன்' கூறுவது போல் எங்களில் யாரும் குறிக்கோளில்லாத பாதங்களுடன் நடந்து கொண்டிருக்கவில்லை. ஆனால் இந்தக் குறிக்கோள்களை நாங்களே தான் தெரிவு செய்து கொள்கிறோம் என்பதும்நாங்கள் எதை நினைக்கிறோமோ அதன்படியே ஆகிறோம் என்பதுமே முக்கியமானது. அடைய முடியாத குறிக்கோள்களை மடத்தனமாகச் சுமந்து கொண்டு மனம் நொந்து அலைகிறோமா அல்லது எட்டக்கூடிய உயரத்தில் உள்ள இலட்சியங்களுக்காக மனநிறைவுடன் போராடி மகிழ்கிறோமா என்பது எங்களைப் பொறுத்தது.

பிரச்சனை தீர்த்தல்

வாழ்க்கைப் பிரச்சனைகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்ளும் ஆற்றல் உளத் திடகாத்திரம் உடைய மனிதனிடத்தில் காணப்படும். பிரச்சனைகள் உருவாகும் போதே அவன் அவற்றைத் தீர்த்துக் கொள்கிறான். நாளைக்கு வரப்போகும் பிரச்சனைகளைப் பற்றி இன்றைக்கு வரப்போகும் பிரச்சனைகளைப் பற்றி இன்றைக்கு வருந்துவதால் அல்லது கவலைப்படுவதால் அவற்றைத் தீர்த்துவிட முடியாது என்பதை அவன் நன்கு அறிவான். பிரச்சனைகளை அவை உருவாவதற்கு முன்பே தீர்த்துக்கொள்ள அவன் முயலுவதில்லை என்பதல்ல இதன் கருத்து. திட்டமிடுதல் என்பதற்கும் கவலைப்படுதல் என்பதற்கும் இடையில் எவ்வளவு வேறுபாடுகள் உண்டு என்பதை இச்சந்தர்ப்பத்தில்புரிந்து கொள்ள வேண்டும். நாளைக்கு வரப்போகும் பிரச்சனையை எப்படித் தவிர்த்துக்கொள்ளலாம் அல்லது தீர்த்துக் கொள்ளலாம் என்பதையிட்டு இன்று திட்டமிடலாம். ஆனால் அதைப் பற்றி இன்று கவலைப்படுவது எந்தப் பயனையும் அளிக்காது. பகற்கனவு காண்பதாலேயோ அல்லது பிரச்சனைகளை விட்டு விலகி ஓடுவதாலோ பிரச்சனைகள் தீர்க்கப்பட்டதாகச் சரித்திரம் இல்லை. நல்ல உளத் திடகாத்திரமுள்ள ஒரு மனிதன் தனக்குப் புதிதாக வரும் பிரச்சனைகளை எதிர்கொள்கிறான். அதைத் தீர்ப்பதற்குத் தன்னால் முடிந்தவற்றைச் செய்கிறான். பின்னர் அது பற்றிக் கவலைப்படாமல் திருப்தி கொள்கிறான்.

தன்னை விரும்புதல்

நல்ல உளத்திடமும் சந்தோஷமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. நல்ல உளத்திடகாத்திரமுள்ள மனிதன் முற்றாகத் திருப்தி உள்ளவனாகஇருப்பான் என்பதல்ல இதன் கருத்து. தனது மனதின் உள்ளே, மிக அடியிலே அவன் தன்னைப்பற்றி ஒரு உயர்ந்த விம்பம் வைத்திருக்கிறான் என்பதே இதன் கருத்தாகும். உங்களைப்பற்றி நீங்களே மிகத் தாழ்வான ஓர் அபிப்பிராயம் வைத்துக்கொண்டுநீங்கள் எந்த ஒருதிருப்திகரமான, முன்னேற்றமான காரியத்தையும்செய்ய முடியாது. உங்களை நீங்களே வெறுத்துக் கொண்டால் உங்கள் ஆற்றல்கள் குறைந்துவிடும். உங்கள் உடல் திடகாத்திரமும் உள்ளத்திடகாத்திரமும் பெருமளவில் அழிக்கப்பட்டுவிடும். ஆகவே, இனிமேலாவது நீங்கள் உங்களை விரும்பப்பழகவேண்டும். வேறு எவரையும் விட நீங்களே உங்களை நன்றாகக் காதலிக்க வேண்டும்.

மற்றவர்களை விரும்புதல்

நல்ல உளத்திடம் உடைய மனிதன் எப்படித் தனது குறைபாடுகளையும் பலவீனங்களையும் தானேபொறுத்துக் கொள்கிறானோ அப்படியே மற்றவர்களின் குறைகளையும் பலவீனங்களையும் பொறுத்துக் கொள்கிறான். குறைபாடு இல்லாத மனிதன் உலகில் இல்லை என்பதை இவன் நன்குதெரிந்து வைத்திருக்கிறான். தான் கட்டளை இட மற்றவர்கள் அதற்குப் பணிய வேண்டுமென்று இவன் ஒருபோதும் விரும்புவதில்லை. இதனால் இவன் மற்றவர்களாலும்கட்டளை இடப்படுவதில்லை. மற்றவர்களின் நல்ல இயல்புகளை நினைப்பதிலும் அவர்களுக்கு ஆர்வமுள்ள விடயங்களைப்பற்றி அறிவதிலும் இவன் அக்கறை காட்டுகிறான். இதனால் இவனதுநட்பைஇழப்பது மற்றவர்களுக்கு அரிதாக இருக்கிறது. ஆகவே இவனது நட்புகள் எல்லாம் நெடுங்காலம் நிலைத்திருக்கின்றன.

எதிர்காலத்திட்டம்

திடமான உள்ளம் கொண்ட மனிதன் தனது எதிர்காலத்தை ஒழுங்கான முறையில் திட்டமிடுகிறான். ஆனாலும் நிச்சயமற்ற எதிர்காலத்தையிட்டு இவன் பயங் கொள்வதில்லை. வாழ்க்கை என்பது மாறிக் கொண்டிருப்பது என்பதை இவன் உணர்கிறான். ஆகவே மாற்றங்களை மகிழ்ந்து வரவேற்கிறான். தனதுஎதிர்காலத்தைப் பற்றி வடிவாகத்திட்டமிடுவதனால்தான் போய்ச்சேர வேண்டிய முடிவிடத்தைப் பற்றி இவன் நன்றாக அறிந்து வைத்திருக்கிறான். எதிர்காலத் திட்டம் இல்லாத ஏராளமான மக்கள் தாங்கள் எங்கே பயணம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றிஅறியாமலே நடந்து கொண்டிருக்கிறார்கள்.

தீர்மானம் எடுத்தல்

வாழ்க்கைப் பாதையிலே சிறந்த உள ஆரோக்கியமுள்ளவன் சில தீர்மானங்களை எடுக்கிறான். இதில் தவறு ஏற்படும் போது அவற்றைத் தவறென்று ஏற்றுக்கொள்கிறான். ஆனால் நான் தவறசெய்துவிட்டேனே என்றோ, அல்லது தவறான தீர்மானத்தை எடுத்துவிட்டேனே என்றோ அவன் காலம்பூராவும் நினைத்து நினைத்துக் கவலைப்படுவதில்லை. வாழ்வில் மறுமுறை அதேதவறைச் செய்வதில்லையென்று தீர்மானம் எடுத்துக்கொண்டு அத்துடன் அமைதி பெறுகிறான். இதனால் அவனது தவறுகளே வாழ்க்கையில் அவனுக்கு பெரும் லாபத்தை ஈட்டித் தந்துவிடுகின்றன.

ஆகவே சுருக்கமாகச் சொன்னால் நல்ல உளத்திடம் உள்ளவன் தன்னால் முடிந்ததைச் செய்கிறான். தனதுசெயற்பாட்டில் திருப்தி ஏற்படாவிட்டால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் மறுமுறை திறமையாகச் செய்ய முயற்சிக்கிறான். தன்னால் செய்து முடிக்கப்படக் கூடிய இலட்சியங்களைப் பற்றியே நினைக்கிறான். அதை நோக்கி வேகமாக இயங்குகிறான். சந்திரனை இறக்கி பூமிக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவன் ஒருபோதும் முயலுவதில்லை. அதனால் அவன் வாழ்வில் எப்போதும் அமைதி நிலவுகிறது.

இத்தகைய உளத்திண்மையை நீங்களும் உங்கள் வாழ்வில் ஏற்படுத்தி அமைதி காணுங்கள்

(ஆதாரம்;
ஜோன் வில்லியம்ஸ்)

★ இன்று நினைவு தினம்

சாதிவெறியைச்சாடி சமரசக் குரலெழுப்பிய சமரசவாதி

★ வ. மகாலிங்கம்

உயர்சாதி பிரபுத்துவகுடும்பத்தில் பிறந்து பிற்போக்குக் கருத்துக்கள் அலைமோதிய சூழலில் வளர்ந்து சாதி வெறி சன்னதமாடிய கட்டத்தில் சமரசக்கொடி ஏந்தி வடபகுதி அரசியல் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்திய பெருமை வடமராட்சியில் துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் செல்லையா தர்மகுலசிங்கத்துக்கே உரியது. ஏறு போன்ற நடை; எதற்கும் அஞ்சாத திடநெஞ்சம்; கண்ணீர் கண்டு கனிந்துருகும் உள்ளம்; ஏழைகளுக்கு உதவவேண்டும் என்றஉயர்ந்த இலட்சியம் இத்தனையும் ஒருங்கே உருவெடுத்த உருவந்தான் ''ஜெயம்'' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட சமசமாஜி தர்மகுலசிங்கம்.

1910-ம் ஆண்டு சித்திரை மாதம் துன்னாலைப் பகுதியில் முருகேசு செல்லையாவுக்கும், தங்கம்மா அம்மையாருக்கும் மூன்றாவது புதல்வனாக அவதரித்த இவர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தமது உயர் கல்வியை முடித்துக் கொண்டு, சட்டக்கல்லூரியில் நியாயவாதியாகப் பட்டம் பெற்று, பருத்தித்துறை நீதிமன்றிலேயே தமது தொழிலை வெற்றிகரமாக நடாத்திவந்தார். வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார் என்பதிலும் பார்க்க அத்தொழிலை ஒரு சமூக சேவையாக மாற்றினார் என்பதே பொருந்தும்.

பள்ளிப் பருவத்தில் தமது பாடங்களில் மட்டுமன்றி, நாடகம், இசை நாவன்மை ஆகிய துறைகளிலும் முன்னணியில் நின்றார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாகப் பேசும் திறமை பெற்றிருந்த இவர், தமது மூத்த சகோதரர்களாகிய முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. தனபாலசிங்கம், திரு. குலவீரசிங்கம் ஆகியோரின் அடிச்சுவட்டைப்பின்பற்றி ஒரு சிறந்த வழக்கறிஞரானார். வழக்கறிஞர் தொழிலே அவரது அரசியல் வாழ்வுக்கு நிலபாவாடை விரித்து வரவேற்றது.

வழக்கறிஞராகக் கடமையாற்றியபோது ஏழைமக்களின் கூட்டம் அவரது செயலகத்தை முற்றுகையிட்டு நிற்கும். ஜீவனாம்சம் கோரி நீதிமன்றுக்கு வரும் அபலைப் பெண்களிடம் பணம் பெற்றுக் கொள்ளவே மாட்டார். இன்னும், ஏழைகள் நீதிமன்றிலிருந்து வீடு திரும்பும்போது ஏதோ உரிமையுடன் கேட்பது போல ''ஜெயம்பிரக்கிராசியாரிடம்'' பஸ் கட்டணம், தேநீர், சிற்றுண்டிச் செலவுகளுக்கும் பணம் பெற்றுச் சென்றதாகக் கூறப்படுகிறது. ஏற்றுக் கொண்ட வழக்கைஇறுதிவரை தமது முழுத்திறனுடனும் போராடி நீதிபெற அவர் தவறவில்லை.

அமரர் தர்மகுலசிங்கத்தின் அரசியல் வாழ்வு ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அவர் ''வோட்டு''ப் பொறுக்கும் சாதாரண அரசியல்வாதியாக இருக்கவில்லை. அரசியல் மேடைகளில் அவர்பேசவில்லை; கர்ச்சித்தார். சமுதாய ஏற்றத்தாழ்வுகளை, அநீதிகளை, உளுத்துப்போன மூடக் கொள்கைகளை, பெரிய இடங்களில் புரையோடிப் படர்ந்த ஊழல்களை, சாதிவெறியை கனல்கக்கத் தாக்கினார். பருத்தித்துறைத் தொகுதியில் நுணுவில் விநாயகர் ஆலய வீதியில் நடைபெற்ற அவரது தேர்தல் கூட்டம் மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சி. அக்கூட்டத்தில் முதுபெரும் அரசியல்வாதியான அமரர் திரு. செ சுந்தரலிங்கம் திரு தர்மகுலசிங்கத்தை ஆதரித்துப் பேசினார். பரந்த அக்கோவில் வீதியும் மக்கள் கூட்டத்தை அடக்கமுடியாமல், பக்கத்திலுள்ள வயல்வெளிகளிலும் மக்கள்கூட்டம் நிறைந்திருந்தது. கோப்பாய் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டமேதையுமான திரு. மு. பாலசுந்தரமும், தர்மகுலசிங்கத்தை ஆதரித்துப் பேசினார். எனினும் சாதிவெறியரும், முதலாளித்துவ சக்திகளும், பிற்போக்கும்பலும் 1947-ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் அவருக்கு எதிராக அணிவகுத்து அவரை இரண்டாம் இடத்துக்குத் தள்ளி விடுவதில் வெற்றி கண்டனர்.

வடபகுதியில் அமரர் சிற்றம்பலத்தை அடுத்து, சமசமாஜக் கட்சியின் முன்னணியீட்டியாக விளங்கியவர்களுள் அமரர் தர்மகுலசிங்கம் குறிப்பிடத்தக்கவர். அடுத்தவர் முன்னாள் செனற்றர் திரு. பொ. நாகலிங்கம். வடபகுதியில் பல்வேறு தொழிற் சங்கங்களுக்கும் தலைமைதாங்கி தொழிற் சங்கப் போராட்டங்களை நடத்தி வெற்றிபெற்ற பெருமையும் அமரர் 'ஜெயத்துக்கே உரியது. மார்க்சீய லெனினிச சித்தாந்தத்தை நன்குணர்ந்த அமரர் ஜெயம் இறுதி வரை ஒரு ரொட்ஸ்கிய வாதியாகவே திகழ்ந்தார். அவரது காலத்தில் டாக்டர்கள், என். எம், கொல்வின், வெஸ்லி, கபசிங்கா, விவியன், தகாநாயக்கா, பிலிப், ரொபேட் ஆகியோரின் சமசமாஜக் குரல்கள் வடபகுதியில் தொடர்ச்சியாக எதிரொலித்தமை குறிப்பிடத்தக்கது. தொழிலாளர் வர்க்க மத்தியில் அமரரின் செல்வாக்கு அபரிமிதமாக வளர்ச்சியடைந்தமை கண்டு பீதியடைந்த முதலாளித்துவ, படுபிற்போக்குச் சக்திகள் கூலிப்படையினரை ஏவிவிட்டு இரும்புக் கம்பிகளால் தாக்குதல் நடத்திய நிகழ்ச்சிகளும் அவருக்கு அணிகலன்களாக அமைந்தன.

இனிய தமிழில் கவர்ச்சியாகப் பேசும் திறமை படைத்த திரு. தர்மகுலசிங்கம் ஒரு நடிகனாக, இசையாளனாக,ஓர் இலட்சியவாதியாக மட்டுமன்றி ஓர் இலக்கியவாதியாகவும் திகழ்ந்தார். அரசியல் மேடைகளில் மட்டுமன்றி மாணவர் மன்றங்களிலும், பொதுக்கூட்டங்களிலும், இலக்கிய மன்றங்களிலும் முழங்கினர் இந்திய தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. ம.பொ.சிவஞானம் வடபகுதிக்கு வருகை தந்த பொதுக் கூட்டமொன்றில் இலக்கியச் சுவை நனி சொட்டச் சொட்டப் பேசிய அமரர் பதினெண் சித்தர் பாடலொன்றை மேற்

(8-ம் பக்கம் பார்க்க)

இவ்வாரம் உங்கள் பலன்

வாரபலன்: மாதம் - ஆடி- திகதி - 13 (1985-7-28)

ஞாயிறு திதி - ஏகாதசி மு.ப வரை

நக்ஷத்திரம் - கேட்டை மு.இ. வரை

மேடம்

மாணவர்களுக்குக் கல்வியில் விடாமுயற்சி வேண்டும். குடும்பத்தர்களுக்குச் சிறு சச்சரவுக்கு இடமுண்டு. இவ்வாரம் எவ்விடயத்திலும் சிந்தித்துச் செயல்படவும். பிள்ளைகளின் நிலையிலும் சோர்வுக்கு இடமுண்டு. கூட்டுத்தொழில் புரிவோர் பங்காளிகளுடன்பகைத் தவிர்க்கவேண்டும்.

இடபம்

திடீரென வரும் தாக்குதல்களால் திகைக்க நேரிடும். உன் வீட்டிலேயே பூசல்கள் தோன்றும். விஷமிகளின் புனைந்துரைகளால் விபரீதங்கள் விளையலாம். பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும்.

மிதுனம்

குடும்பத்தில் சிறு பிணி வாட்டும். உங்கள் விடயங்கள் அனைத்தும் வேவு பார்க்கப்படும். வெளியிடத்துத் தொடர்புகளும் பெருகும். தொழில் துறையில் புதிய யுக்திகள் கையாளப்படலாம். அந்நிய பிரபுக்கள் உதவியும் உண்டு.

கடகம்

தொழில்துறையில் நஷ்டமும், குடும்பத்தில் சோர்வுமுண்டு. தூரத்துப்பயணம் துயரத்தைத் தரலாம். இனசனங்களின் மத்தியில்பூசல்கள் தோன்றும் இல்லத்திலும் சச்சரவிற்கு இடமுண்டு. இவ்வாரம் எவ்விடயத்திலும் அவதானம் வேண்டும்.

சிங்கம்

பெரியோர் உதவியுண்டு. பிறவழியிலிருந்து சுபசெய்தி கிடைக்கும். புண்ணிய விருப்பும் புகழ் தரும் காரியங்களும் இடம்பெறும். தெய்வ வழிபாடு சிறப்புத்தரும்.

கன்னி

வாகனச் சொந்தக்காரர்களுக்கு வரவில் தடையுண்டு நீண்டநாள் கடனும் நிவர்த்தியாகும். அதிக நம்பிக்கை ஆபத்தைத் தரலாம். எதிர்பாராத வரவின்மூலம் எண்ணியது நிறைவேறும் இவ்வாரம் திருப்திகரமான செய்திக்கும் இடமுண்டு.

துலாம்

அதிக பிரயாசத்தினால்அதிக பொருள் ஈட்டலாம் பயன் தரும் சம்பவமொன்று இடம் பெறலாம். வியாபாரிகளுக்கு உற்சாகமானவாரம். மாணவர்களுக்கு நன்மையுண்டு.

விருச்சிகம்

இவ்வாரம்எவ்விடயத்திலும் முன்னெச்சரிக்கை நன்று கருடப்பார்வை உங்களை வட்டமிடும் கல்வித்துறையிலீடுபடுவோர் விடாமுயற்சி விரும்பத்தக்கது., சிலருக்குக் கடல் கடந்த பிரயாணம் குறித்தும் திட்டமிடப்படலாம்.

தனுசு

மனத்தில் அமைதி குன்றும். குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள். அலைச்சலுக்கும் இடமுண்டு குடும்பத்தில் சிறுபிணி வாட்டும் குறை கேட்கவேண்டிய சந்தர்ப்பத்திற்கும் இடமுண்டு.

மகரம்

பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித்தரும். அவசரப் போக்கினால் விபரீதங்கள் விளையலாம். ஆராய்ச்சியாளர்களுக்குச்சிறப்பானவாரம். நண்பர்களாலும் உதவியுண்டு. எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பும் கிடைக்கலாம்.

கும்பம்

இவ்வாரம் எவ்விடயத்திலும் சோர்வு தென்படும். அடுத்துக்கெடுப்பதற்குச் சிலர் எத்தனிப்பர் சகோதர வழியாலும் சஞ்சலமான செய்திக்கு இடமுண்டு. அமைதி நன்று

மீனம்

தாய்வழித் தனவரவுக்கு இடமுண்டு இல்லத்தில் விருந்துபசாரங்களுக்கு இடமுண்டு இயந்திரங்களில் ஈடுபடுவோர் இவ்வாரம் அவதானத்துடன் செயல்படவும்

திருமலை
க. வே. ரவீந்திரன்

ஆற்றூர்த்துஞ்சிய

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரசோழர்'' என்றும் தொடர்கள் வருகின்றன. பழையாறை நகரின் பெருமையைப்பிற்காலத்தில் சேக்கிழார் பெருமான்,

''தேரின் மேவிய செழுமணி
வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர்
பதி பழையாறை''

இத்தகைய பெருமைகள் பலவற்றை அக்காலத்துச் சிலர் கண்டனர், நன்கறிந்தனர், பின்னர் மத்தியகாலம் எனப் புகழ்பூத்த அவர்களின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் அமைத்த பல்வேறு தலைநகரங்களில் தமிழ்க்கலாசாரம் துலங்குமாறு நிலைமை உருவானது,

---

சுந்தரகாண்டம்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்றும் காடுகள் கட்டுக்கொண்டுதானிருக்கின்றன! சுந்தரகாண்டம் இன்னும் முடியவில்லை!

(மிகுதி அடுத்த வாரம்)

சாதிவெறி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கோள் காட்டி, உலக மக்கள் அனைவரும் உழைப்பாளி வர்க்கத்துக்கு மனமுவந்து ஈவது, உலகைப் படைத்த இறைவனுக்கு ஈவதற்கு நிகரானது என்று கூறினார். அவர் மேற்கோள் காட்டிய பாடல் இது தான்;-

''படமாடக் கோயில் பரமற்
[கொன்றீந்தால்
நடமாடக் கோயில் நம்பர்க்
(கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்
[கொன்றீந்தால்
படமாடக் கோயில் பரமற்
(கங்காமே''

அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலத்திலும் அமரர் தர்மகுலசிங்கம் நாடகங்களில் பங்கேற்று ஒரு சிறந்த நடிகனாக, இசையாளனாக சமுதாயத் தில்லுமுல்லுகள், ஓட்டை ஓடிசல்களைக் குத்திக் காட்டிச் சாடினார்.

தமது சக நடிகர்களுடன் தோழமையுணர்ச்சியுடன் ஒரு நண்பனாகவே நடந்து கொண்டார்.

அமரர் தர்மகுலசிங்கம் சமசமாஜக் கட்சியின் கொள்கைகளின் அசைக்க முடியாத பற்றுக் கொண்டிருந்தார். அரசியலில் சந்தர்ப்ப வாதத்தை அடியோடு வெறுத்தார்.

பாராளுமன்றத்துட் புகுந்து உல்லாச உப்பரிகையில் வாழ்வதையே அவர் குறிக்கோளாகக் கொண்டிருந்தால், அவரது நெருங்கிய உறவினனும், அக்கால கட்டத்தில் தமிழ் மக்களின் முடி சூடா மன்னனுமாக விளங்கிய அமரர் ஜீ ஜீ. பொன்னம்பலம் தலைமை தாங்கிய தமிழ் காங்கிரஸில் சேர்ந்து, 1947 ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலேயே அவர் பருத்தித்துறைத் தொகுதிப் பிரதிநிதியாகியிருக்கலாம். ஆனால் அரசியல் குறுக்கு வழிகள் அவருக்கு 'அலேஜிக்.'

அமரர். தர்மகுலசிங்கம் தொடர்ந்து பொதுவாக வடபகுதியிலும், குறிப்பாக வடமராட்சியிலும் நடத்திய அரசியல் வகுப்புகளில் ஒரு கைநூலோ, குறிப்புகளோ இன்றிக் கலந்துரையாடி இளைஞர்களின் பல்வேறு நுணுக்கமான அரசியல் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார். இவ்வகுப்புகளில் சமசமாஜக் கொள்கைக்கு எதிரானவர்களும் கலந்து விடுத்த வினாக்களைகளுக்கு மிகத் திருப்தியான விடையளித்தார்.

அமரர் தர்மகுலசிங்கம் இன்று உயிர் வாழ்ந்திருந்தால், முதல் சமசமாஜப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்த பெருமையை வடமராட்சி மக்களுக்குக் கிடைக்கச் செய்திருப்பதுடன் வட பகுதியில் இடதுசாரி இயக்கம் நிரந்தரமான ஓர் இடத்தைப் பெறுவதற்கு வழி வகுத்திருப்பார் எனத் துணிந்து கூறலாம்.

டுவ்டுவ்டுடுக்கு!
டுவ்டுவ்டுடுக்கு!

'நற்கரும்பை நானே வீட்டில் வைத்து அத்தத்தாதிமேல் கொள்ளை ஆசை கொண்டேன்'

டுவ்டுவ்டுடுக்கு!
டுவ்டுவ்டுடுக்கு!

உடுக்கு ஒலியுடன் இணைந்து 'கோவலன்' கதைவழி கூத்துப் பாடலைப் பாடுகிறார் அவர். பாடல் முடிந்ததும்...

''அடிபெண்ணே! அந்த வண்ணமயிலாள் மாதவி தனில் நான் ஆசை கொண்டேன். அவள் என்மேல் மையல் கொண்டாள் இது விதிவசமே நடந்தேறிவிட்டது. நீ வேலைப்படலாமா?...'' என வசனம் பேசுகிறார் முதியவரான திரு. கணபதி ஐயம்பிள்ளை.

என் விருப்பத்துக்கிணங்க 'விலாசக் கூத்து', 'நாட்டுக் கூத்துப்' பாடல்கள் சிலவற்றையும் பாடிக் காட்டுகிறார். வேறு வேறு நய ஓசைகள் அமைந்த அப்பாடல்களுக்கு ஏற்ற வகையில் உடுக்கும் அடிக்கிறார்.

அரியாலையூரில் ஒரு நாட்டுக்கூத்துப் புலவன்

★

சந்தித்து எழுதியவர்;
ஐ. சண்முகலிங்கம்

உடுக்கு தமிழர் பாரம்பரிய வாத்தியங்களில் ஒன்று. கபால ஓடுகளை மாலையாகக் கோர்த்து அணிந்து சுடலைச்சித்தனாக நடமாடும் சிவன் உடுக்கு வைத்திருப்பது புராணங்களில் நாமறிந்ததே.

'கதகளி' என்பது மலையாள மொழிபேசும் மக்களின் பாரம்பரியக் கலை.

ஆனால் 'உடுக்கும்', 'சல்லரி' எனப்படும் 'கைத்தாளமும்' பின்னணி வாத்தியங்களாகக் கொண்டு தமிழ் மக்களின் மரபு வழிக் கலைகளில் ஒன்றான 'கூத்து'க்கள் அமைகின்றன.

நாடகங்கள், 'மேடை, நவீன வசதிகள், பேச்சுக்கு முக்கியத்துவம் என்பனவற்றால் கூத்திலிருந்து வேறுபடுகின்றன.

இன்று 'கூத்துக்கள்' அற்றுப்போகும் நிலை துப்பாக்கியமேயாயினும் சிற்சில கிராமங்களில் இன்னும் அவை வாழ்கின்றன.

நல்லூர், புவனேஸ்வரி அம்பாள் வீதியில் வசிக்கும்தொண்ணூறு வயதுடைய முதிய கூத்துக் கலைஞர் திரு. கணபதி ஐயம்பிள்ளையைச் சந்தித்தேன். அவர் கூறுகிறார்...

வெள்ளைக்காரன் எங்களை ஆண்ட அந்தக் காலத்தில் 'தலைவரி'ப் பணம் செலுத்த ஆரம்பிக்கின்ற 18-வது வயதில் 'கோவலன் கதையில்' கோவலனாக' வேஷம் போட்டேன்.

அந்தக் காலத்தில் 'அண்ணாவி' என்றால் கூத்தாடுகிற 'பிள்ளைகளுக்கு'க் கெடிக்கலக்கம்.

பாடல் சொல்லித்தந்து நாம் பாடுகிற போது தாளம் பிழைத்து விட்டால் தனது கையில் உள்ள கைத்தாளத்தினால் எறிந்து விடுவார் அண்ணாவி

ஒரு கூத்துப் பழகி மேடையேற்றக் குறைந்தது ஆறு மாதங்களுக்கு மேலே செல்லும்.

ஒவ்வொரு வார இறுதியிலும் 'பழக்கம் நடக்கும். இறுதிப் பழக்கத்தன்று 'வெள்ளுடுப்பு' அணிவோம்.

வெள்ளுடுப்பு என்றால்..?

மேடையேற்றத்தின் போது எப்படி உடை அணிவோமோ கிட்டத்தட்ட அதே போல உடுப்புக்களை அணிந்து கொண்டு இறுதிப் பழக்கத்தை அதாவது ஒத்திகை செய்வது தான்.

'கதைவழி' கூத்தில் 'கணித உடுப்பு' அதாவது 'மணி உடுப்பு' (அரசர் பாத்திரங்கள் அணிவது) போடுவோம்.

அண்ணாவிமார் ஊருக்கு ஒருவர் கூட இருக்க மாட்டார்கள். அவர்களிடம் ஏராளமான ஏட்டுப் பிரதிகள், ஓலைச் சுவடிகள் இருக்கும். அவர்களுக்குச் சமூகத்தில் தனிமதிப்பு இருந்தது.

அந்நாளைய பேர்பெற்ற தனக்குத் தெரிந்த சில அண்ணாவிமார்களது பெயர்களைக் கலைஞர் சொல்கிறார்.

அரியாலைக் கோபாலர், அச்சுவேலி அப்புக்குட்டி, இருபாலைப் பண்டாரி.

இவர்களிலே எனக்குக் குருவாக இருந்தவர் அரியாலைக் கோபாலர் அண்ணாவி. இவரிடம் கோவலன் கதை, பவளக்கொடி, வீரகுமாரன், அல்லி அருச்சுனா, கார்த்தவராயன் போன்ற கூத்து ஏட்டுப்பிரதிகள் இருந்தன.

கோபாலரின்பேரனான 'கலைஞர் பதமா' என அழைக்கப்படும் திரு. க. பத்மநாதன் மிகச்சிறந்த நாடகக் கலைஞராகவும், ஓவியக் கலைஞராகவும் அண்மைக்காலம் வரை இருந்து மறைந்து விட்டார். இவர் வாழ்ந்த காலத்தில் தாத்தா கோபாலரின் வழியில் பல கூத்துக்களை மேடையேற்றிப் புகழ் பெற்றிருந்தார்.

அந்தக் காலத்தில் பரம்பரை பரம்பரையாகவே அண்ணாவிமார்கள் தோன்றினர். இதற்கு முக்கிய காரணம், ஓலைச் சுவடிகள் அவர்கள்வசம் இருந்தமையே. பாடப்படும் குரல் வளமும் தொடர்ந்து வந்தது.

நாலாஞ்சடங்கில் மாப்பிள்ளை நடித்தார்

இன்று திருமணம் போன்ற கொண்டாட்டங்களில் 'கோஷ்டி' பிடித்துப் பாடுவது படம் காட்டுவது போன்று, அன்று கூத்துப் போடுவோம்.

எனக்கு 20 வயதில் திருமணம் நடந்தது. எனது நாலாம் சடங்கன்று நானே கோவலன் வேஷம் போட்டுப் பாடி ஆடினேன்.

எனக்குப் பிடித்தது கோவலன்' பாத்திரம்தான். எனினும் பவளக்கொடியில் அர்ச்சுனனாகவும், சித்தாமணியில் வீரகுமாரனாகவும், அல்லி அருச்சுனாவில் தருமராகவும், காத்தவராயனில் சிவனாகவும் இப்படிப்பல வேஷங்கள் ஏற்றுக் கூத்தாடி இருக்கிறேன்.

கூத்தாடுவதற்கு அன்று நடிப்பைவிட நல்ல குரல் வளம் அவசியமாயிருந்தது அதாவது குரலில் இனிமையும் பலமான சத்தமும் உள்ளவர்களுக்கே முதலிடம் தருவார்கள். அந்நாளில் ஒலிபெருக்கி பாவனையில் இல்லாததனை ஞாபகப் படுத்துகிறார் அவர்.

இன்றும் மிக இனிமையான பலமான குரலுடன் விளங்கும் திரு. ஐயம்பிள்ளை அன்று கூத்துக்களில் தான் பாடினால் அப்பாடல் சுமார் கால் மையிலுக்கும் கூடுதலான தூரத்துக்குக் கேட்கும் என்கிறார்.

பலமான சத்தத்தில் பாடினால் குரல் வெகுவிரைவில் அடைபட்டுப் போகாதா?

அதற்கு மருந்து உண்டு மிளகு நற்சீரகம் இடித்துப் பனங்கராரத்துடன் கலந்து சாப்பிட்டால் குரல் அடைக்கவே அடைக்காது.

'கதைவழி' கூத்து என் விருப்பமானது என்றாலும் பல நாட்டுக் கூத்துகளிலும், விலாசக் கூத்துகளிலும் வேஷம் தாங்கியுள்ளேன்.

ஒரே கதையை - உதாரணமாக 'கோவலன் கதையை' கதைவழியாகவும், நாட்டுக் கூத்தாகவும், விலாசமாகவும் மேடையேற்றுவதில் பல வித்தியாசங்கள் உண்டு.

'கதைவழி'யானால் பாத்திரங்கள் அணியும் உடைகள் 'மணி உடுப்புக்கள்! ஆட்டம் கிடையாது. பாடல்களே வசனங்களாக அமைந்திருக்கும். எனினும் சிறுவசனங்கள் இருக்கும். இதற்குப் பின்னணி வாத்தியம் உடுக்கும், கைத்தாளமுமே. பாடல்களைப் பாத்திரங்கள் பாடியபின் பின்னணிப் பாடகர்கள் திரும்பவும் பாடுவர்.

'நாட்டுக் கூத்தானால்' கோவில்களில் 'சூரன்போர்' திருவிழாக்களில் 'சூரபத்மன்' படைகளாக வரும் பத்தர்கள் அணியும் அகலமான 'கரப்பு உடுப்புக்களை' சகல பாத்திரங்களும் அணிவர். தலையில் சித்திர வேலைப்பாடுகள் கொண்ட பெரிய முடிகளைச் சூட்டி இருப்பர். தோள் புஜங்களும் சிறகுகள் கொண்ட பெரியனவாக இருக்கும். மார்பிலும் கண்ணாடி பதித்த வேலைப்பாடுடனை மார்பணிகளைக் கட்டி இருப்பர். கையிலே பெரிய 'வாள்' இருக்கும். பின்னணி வாத்தியம் 'மத்தளமும் கைத்தாளமும் இவற்றின் தாளத்துக்கேற்ப தொங்கித் தொங்கி சுற்றிச் சுற்றி ஆடவேண்டும். காலில் 'சதங்கை' கட்டி இருப்பர். பெண் பாத்திரம் தலைவிரித்தபடி இருக்கச் சிறிய முடி தரிப்பர். ஆட்டங்களுக்குப் பதிலாக மேடையில் முன்னுக்கும், பின்னுக்குமாக நகர்ந்து பாடுவர்.

ஆண்களே அன்று பெண் வேடங்களும் போட்டனர்.

'விலாசம் கூத்தில்' மத்தளம் கைத்தாளத்துடன் ஆர்மோனியமும் பாவிக்கப்படும். இக்கூத்துப் பாத்திரங்கள் சிறிய அளவிலான முடிகளையும், கைப்புஜங்களையும். மார்புப்பதக்கங்களையும், அரச பாத்திரங்கள் இனிமாவில் அணிவது போன்ற சிறிய பாவாடைகளையும் அணிந்து கையில் சுமார் ஒன்றரை அடி நீள முள்ள 'வாழி' வைத்திருப்பர். விலாச ஆட்டம் மிக நுணுக்கமானது.

அவ்வாட்டம் 'காவடிச்சிந்து ஆட்டம்போல் மெதுமையாக-துள்ளிக்குதிப்பதாகவமையும், தாளத்துக்குக் கால் வைப்பது இதில் முக்கியம். பாடல்கள் வேகம், அவசரம் அதிகமின்றி இருக்கும்.

முகப்பூச்சு,கூத்துக்களில்மிக முக்கியமான அம்சமாகும்.

கூத்துக்கள் இன்றைய நாடகங்கள் போன்று ஒரு சில மணித்தியாலங்களில் நடித்து முடித்து விடக்கூடியனவல்ல. எந்தக் கூத்தானாலும் ஓர் இரவு பூராவுமே நடாத்தப்படும்.

(9-ம் பக்கம் பார்க்க)

அரியாலையூர்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று மேடை போட்டு நாடகங்கள் நடப்பதுண்டு. ஆனால் நாட்டுக்கூத்து, விலாசம் என்பன அன்று வளையம் கட்டி" நிலத்திலேயே நடாத்தப்பட்டன. மக்கள் சுற்றி நாலாபுறமும் இருந்து பார்த்து ரசிப்பர்.

தமக்குப் பிடித்த பாத்திரத்துக்கு அல்லது நடிகருக்கு மாலைகள் போடுவதும், பணப்பரிசு கொடுப்பதும் சகஜமானது.

இன்றைய மின்சார வசதிகள் அன்று இல்லை.

மண்ணெண்ணை, இலுப்பெண்ணை பந்தங்களில் கூத்துக்கள் நடக்கும்.

கூத்து நடாத்துவதற்கு முன் அன்றைய வழக்கப் பிரகாரம் ஊரில் உள்ள முக்கியமான பெரியார்களைப் போய்ச்சந்தித்து ஒத்துழைப்புத் தரும்படி கேட்கவேண்டும். எதுவித சண்டை சச்சரவின்றி கூத்துக்கள் நடக்க அவர்கள் உதவுவர்.

கூத்துக்களைப்பார்க்கப் பல ஊர்களிலிருந்தும் வண்டில் கட்டி மக்கள் வந்து சேர்வர். பாயையும் கையுடன் கொண்டு வந்து போட்டு அதிலே உட்காருவர்.

அக்காலத்தில் ஒரு கூத்து நடாத்தகிட்டத்தட்ட 200ரூபா போதுமானது. காணியை, நகையை விற்றும், ஈடுவைத்தும் கூத்து ஆடியவர்களும் உண்டு.

கூத்துக்களில் ஏராளமான பாடல்கள் வருகின்றன. எப்படிப் பாடமாக்குவீர்கள்?

ஓலைச் சுவடிகளில் உள்ளதை கொப்பியில் எழுதி தருவார்கள். அந்த நாட்களில் வாசிக்கத் தெரிந்தவர்கள் குறைவு. அண்ணாவியார் சொல்லித்தரத் தர நாம் மனப்பாடம் செய்வோம்.

நான் 'வேதப்பாடசாலையில் 'அரிவரி வகுப்பை' பல தடவைகள் படித்தேன் என சிரிப்புடன் கூறும் ஐயம்பிள்ளை அவர்கள் தான் நடித்த பாத்திரங்களையும், பாடல்களையும், வசனங்களையும், கதைகளையும் இன்றும்-இந்தத் தொண்ணூறு வயதிலும்-ஞாபகம் வைத்திருக்கிறார்.

★

இவர் வாழும் அயலில் கூத்து நடப்பதாயின் இவரிடம் ஆலோசனை கேட்கிறார்கள். ஒத்திகை பார்க்க இவரை நாடி வருகிறார்கள். பழைய மரபுகூத்துக் கதைகளை சிலர் இவரிடம் கேட்டு எழுதிக்கொள்வதும் நடைபெறுகிறது

இன்று தனது ஊரில் தனது சமவயதுடையோர் எவரும் இல்லை எனக் கவலைப்படும் இக் கூத்துக்கலைஞர் பரம்பரை பரம்பரையான தொழில் நெசவுத் தொழிலாகும்.

இன்று பத்திரமாகக் கட்டி வைத்திருக்கும் அலுமினியத்தினாலான உடுக்கையும், 'பால்கிளுவை' மரத்தில் செய்த உடுக்கையும் எடுத்து வாரத்தில் ஒருமுறையேனும் தட்டிப் பாடாமல் இருப்பதில்லை.

காலஞ்சென்ற புத்துவாட்டி திரு இரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணத்திலே முதன் முதலாக இந்தியக்கலைஞர்களை அழைத்துவந்து 'ருமா' நாடகங்களை அறிமுகப்படுத்தி மேடைகளில் நடாத்திய போதும் மரபு வழிக் கூத்துக்கள் அன்று வெகுஜனங்களின் ஆதரவை இழக்கவில்லை. ஆனால் தமிழர்களின் பாரம்பரிய சொத்தான 'கூத்துக்கள்' அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டியவை. இவற்றைச் செய்ய வல்லவர்கள் செயற்பட வேண்டும் என்பதே எனது பெருவிருப்பம். இப்படிக் கூறுகிறார் கோவலன் ஐயம்பிள்ளை.

நாடகக் கலைஞரை நேரில் தரிசித்த பெருநிறைவுடன் நான் திரும்புகிறேன்.

31வது நாள் நினைவஞ்சலி

திருமதி வாலாம்பிகை பொன்னையா

தோற்றம் : 28-2-1921 மறைவு : 28-6-1985

இல்லத் தொண்டும் இறைவன் தொண்டும் ஒன்றேயாக நன்றேயாற்றி இல்லத்தின் ஒளிவிளக்காய் நின்று எம்மை ஆளாக்கி வழி நடத்திய எமது தெய்வமே, உங்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்.

44/2, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(4697)

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் சதாசிவம் சீவரத்தினம்

(பிரபல வர்த்தகர்)

மண்ணுலகு:
19-05-38

விண்ணுலகு:
08-08-84

திதி:
28-07-85

ஹோம் நீட்ஸ்,
3, கூட்டுறவுப் பணிமனை
கட்டிடம், யாழ்ப்பாணம்.

ஹோம் நீட்ஸ்,
35, லோவர் வீதி,
பதுளை

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய்,
வாழ்வின் வழிகாட்டியாய், கொடைவள்ளலாய்,
வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறுத்துயரில்
ஆழ்த்தி, இறைவனடி சேர்ந்த எமது அன்புத்
தெய்வத்தின் உடல் அக்கினியுடன்
சங்கமமாகி ஓராண்டு மறைந்துவிட்டது.
கலங்குகின்றோம்! கண்ணீர் வடிக்கிறோம்!!
மீண்டும் எமக்கு வழிகாட்ட ஒருமுறை
வரமாட்டாயா என ஏங்குகிறோம்.
ஐயோ! உங்கள் உடல்மறைந்து உயிராவி
யாகியதுமட்டும் உண்மை! எங்களிடமிருந்து
நீங்கள் ஓர் அங்குலமேனும் பிரியவில்லை,
தாங்கள் செய்த சேவைகளும், நல்லவர்
களுடன் பழகிய நல்லகுணங்களும்,
எங்களை மற்றோர் ஆதரித்து அனுசரிக்கும்
முறையில் உங்கள் நினைவு எங்களையெல்லாம்
மெய்சிலிர்க்க வைக்கிறது.
தொழிலில் திறமையுடனும் உறவில் அன்புடனும்
பழக்கத்தில் பண்புடனும், சபையில் சிறப்புட
னும், தேவைகளில் முன்னோடியாகவும்
விளங்கிய நீங்கள் இன்னும் பலகாலம் உயிருட
னிருந்தால் தங்களின் பெயரும், புகழும்
மேன்மேலும் குன்றிலிட்ட தீபமாய்
அணையா விளக்காய், கலங்கரை விளக்காய்
உற்றார், உறவினர், அயலவர் அனைவருக்கும்
பிரகாசித்திருக்கும். என் செய்வோம்.
இறைவன் இட்ட வழியே. நாம் அறியோம்
உங்கள் ஆத்மா பிரகாசிக்க, இறைவனை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி

—மனைவி - மக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், தாயார், உறவினர்கள்.

4ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

4675

சைவப்பெரியார்

குருபூசையில் மாணவிக்கு கௌரவம்

(சுழிபுரம்)

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் குருபூசை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பலர் சிறப்புரையாற்றினர். கல்லூரி மேல் வகுப்பு மாணவி செல்வி சிவப்பிரகாசம் கோமளாம்பிகை பெரியாரை பல்வகைக் கோணங்களில் வைத்து சிறந்த ஆய்வுச் சொற்பொழிவாற்றினார். இவ்விரிவுரை பலரது பாராட்டை பெற்றது.

இவரது சொற்பொழிவுச் சிறப்புக்கு சைவப்பெரியாரின் பேரனும், கணக்காய்வாளருமான திரு. சோமசுந்தரம் ரூபா இருநூற்றியம்பதை ரொக்கப் பரிசாக வழங்கி பாராட்டிக் கௌரவித்தார். விழாவிற்கு வருகை தந்தயாவருக்கும் இச் சம்பவம் பெரும் வியப்பை ஏற்படுத்தியது.

கல்லூரி மேல் வகுப்பு மாணவ மாணவிகள்பெற்றோர்கள், நூற்றாண்டு விழாச் சபை நிர்வாகிகள் ஆகியோர் பெரும் திரளாக வைபவத்தில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. [ப]

பிரஜைகள் குழு புதிய தலைவர்

[நெடுந்தீவு]

அருட் திரு. டி. எஸ். தியாகராசா நெடுந்தீவின் பிரஜைகள் குழுவின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னைய தலைவர் அருட் திரு இ. சகாயநாயகம் இடமாற்றம் பெற்றுள்ளதைத் தொடர்ந்து இத் தெரிவு நடைபெற்றது.

உப தலைவர் திரு. த. அம்பலம் தலைமையில் பிரஜைகள் குழுக் கூட்டம்நடைபெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழக

நிர்வாகிகள் பதவியேற்பு தமிழில் இடம்பெற்றது

[பண்டத்தரிப்பு]

சாவகச்சேரி லயன்ஸ் கழக புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு வைபவம் முதல் தடவையாக தமிழ் மொழியில் நடைபெற்றது. மேற்படி கழகத்தின் வருடாந்த கூட்ட வைபவமும், புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு வைபவமும் அண்மையில் கழகத் தலைவர் லயன் கே. சிவஞானசுந்தரத்தின் இல்லத்தில் நடைபெற்றபோது அதில் பிரதமஅதிதியாககலந்துகொண்ட முன்னாள் பிரதி மாவட்ட ஆலோசகருமான சட்டத்தரணி கே. குணரத்தினம் கலந்துகொண்டார்.

சர்வதேச லயன்ஸ் அமைப்பு விதிகளுக்கு அமைய வைபவம் முழுவதையும் தூய தமிழ் மொழியில் லயன். குணரத்தினம் நடத்தினார். அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் சர்வதேச கழகங்களில் அங்கம்வகிப்பதால் கிடைக்கும் விசேட சலுகைகள் பற்றியும், இதுவரை சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மூலம் யாழ். மாவட்டத்திற்கு கிடைத்த அயல் நாட்டு உதவிகள் பற்றியும் விளக்கிக் கூறினார். சர்வதேச அமைப்பில் அங்கம் வகித்தாலும் எமது பிரதேசத்தில் இயங்கும் கழகங்கள் ஒன்றிணைந்து எங்கள் சமுதாயத்தின் அத்தியாவசிய சேவைத் திட்டங்களை நிறைவேற்ற முன்வர வேண்டும் என்றும், அண்மைக் காலத்தில் தென்னிலங்கையில் சில கழகங்களின் நடவடிக்கைகள் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியதையும் இதனால் நாம் ஒரு தனி மாவட்டமாக இயங்கவேண்டிய சந்தர்ப்பம் உருவாகலாம் என்றும் திரு. குணரத்தினம் மேலும் குறிப்பிட்டார். உதவி மாவட்ட ஆளுநர் லயன். கே. வி. முத்துக்குமாரசாமி உரையாற்றுகையில் தமிழ் மொழியில் முதல் தடவையாக நடைபெற்ற இவ் வைபவம் ஏனைய கழகங்களுக்கு முன்மாதிரியானதொன்று என்றும் கழகங்களின் இலட்சியம் நிறைவேற உறுப்பினர்கள் தங்கள் பங்களிப்பை செலுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சாகவச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரி. சோமசுந்தரம் தலைமையிலான புதிய நிர்வாகசபை பதவி ஏற்றது. முன்னாள் தலைவர் லயன் கே. சிவஞானசுந்தரம் தமது பதவிக்காலத்தில் சேவைத் திட்டங்களில் உதவிபுரிந்தவர்களுக்கு ஞாயகார்த்த அன்பளிப்புகளை வழங்கினார்.

ஊர்காவலரின் சடலம்

[வவனியா]

வவனியா பெரிய உலுக்குளம் என்ற இடத்தில் பன்றி வேட்டைக்கு சென்றபோது சூடுபட்டு இறந்த ஊர்காவல் படைவீரரான தர்மபால பண்டாராவுடைய சடலம் சட்ட வைத்திய அதிபதியின் பிரேதபரிசோதனைக்காகபேராதனை மருத்துவ பீடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

வவனியா பொலிசார் சடலத்தினை பெற்று எடுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த மரணத்தில் சந்தேகம் எழுந்ததினை அடுத்தே சட்ட வைத்திய அதிகாரியினுடைய பிரேதபரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது,

பன்றிவேட்டைக்குச் சென்றபோது குறித்த நபருடைய துப்பாக்கி வெடித்து இவர் மரணமானதாகவே கூறப்படுகின்றது.

ளவனியா பொலிசார் இது தொடர்பான விசாரணையினை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் பரிசோதனையின்பின் வவனியாகொண்டுவரப்படுமா என்பது திட்டவட்டமாக தெரியவில்லை,

ஆடிச்செவ்வாய் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் ஆடிச் செவ்வாய் உற்சவம் கடந்த 17-ம் திகதி ஆரம்பமாகியது. தொடர்ந்து வரும் 4 செவ்வாய்களிலும் விசேட அபிஷேக, ஆராதனைகள் நடைபெறும்; கடைசி செவ்வாய் ஆகஸ்ட் 13-ம் திகதியாகும். [நா]

வீதிசீர்கேடு

[பச்சிலைப்பள்ளி]

வவனியா-மன்னார் வீதியில் வாகனங்கள் புதையும் அபாயம் தோன்றியுள்ளது.

இவ் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமையினால் வீதியில் மிக ஆழமான பயங்கரக் குழிகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த சிலநாட்கள் அப்பகுதியில் பெய்த மழையினால் அக்குழிகளில் நீர் நிரம்பி வாகனங்கள் புதைகின்றஅபாயம் தோன்றியுள்ளன.

நூல்கள் கொள்வனவு

(வட்டுக்கோட்டை)

வாசகர்களின் தேவையை நிறைவுசெய்ய சங்கானைப் பொது நூலகத்திற்கு ரூபா 15,000 பெறுமதியான நூல்களை நிர்வாகிகள் வாங்கவுள்ளனர். சங்கானைப்பட்டினசபை, மானிய நிதியிலிருந்து இதற்கான பணத்தை ஒதுக்கியுள்ளது. சங்கானைப் பட்டின சபை நூலகர் திரு. ஜோன் செல்வராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

மணிக் கோபுரம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்திற்கு பங்குக் குரவரின் அனுமதி பெற்று ஓர் உயர்ந்த மணிக் கோபுரத்தை ஆலயத்தைச் சார்ந்த மக்களும் அவ்விடத்தில் வாழும் பிற மதத்தினரும் ஒன்றுசேர்ந்து சிரமதானத்தின் மூலம் கட்டியுள்ளனர்.

சோழன் இல்லம் முதலிடம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுனர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது சோழன் இல்லம் 383 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தைப்பெற்றது. சேரன் இல்லம் 318 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தையும், பாண்டியன் இல்லம் 223 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

இப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினார். இப்போட்டி வித்தியாலய அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு

அவசியம் ஏற்படாதவிதத்தில் திம்பு தீர்மானம் எடுப்போம்

பாராளுமன்றத்தில் பிரதமர்

(கொழும்பு)

''சர்வஜன வாக்கெடுப்பிற்கு அவசியம் ஏற்படாத விதத்தில் திம்பு மாநாட்டுத் தீர்மானங்களை எடுப்போம்'' என்று பாராளுமன்றத்தில் பிரதமர் ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

அவசரகாலத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணையில் பிரதமர் மேலும் கூறியதாவது:-

''தமிழ்ப் பிரதிநிதிகளுடனும், தீவிரவாதக் குழுக்களுடனும் திம்புவில் பேச்சுவார்த்தை ஆரம்பமானதைத் தொடர்ந்து சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகமும் குழப்பங்களும் ஏற்பட்டுள்ளன. அதேநேரத்தில் சிறுபான்மையினர் என்ற முறையில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் பீதி ஏற்பட்டதையிட்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டின் இறைமைக்கும் ஒற்றையாட்சி முறைக்கும் பாதகமேற்படாத விதத்தில் எமது அரசியலமைப்பின் அடிப்படையிலேயே திம்பு மாநாட்டில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்,

எமது எதிரிகள் பலத்தைக் குறைத்து எண்ணக்கூடாது, எம்மைப்பற்றியும் பெருமைப் படக்கூடாது.

தீவிரவாதிகளின் போராட்டம் நேருக்கு நேரானதல்ல. ஒழித்து நின்று தாக்கும் போராட்டமாகும்.

தீவிரவாதிகள் பெரும் செல்வம்மிக்கவர்கள். எவருக்கும் லட்சக்கணக்கில் பணத்தைக் கொடுத்து எந்த வேலையையும் செய்விக்கக் கூடியவர்கள்.

பாரதப்பிரதமர் ராஜீவ் கேட்டபடியினால்தான் திம்பு மாநாட்டில் கலந்து கொண்டதாக தீவிரவாதிகள் தெரிவித்தனர். திம்பு மாநாட்டிற்கு தீவிரவாதிகள் யாழ்ப்பாணத்திலிருந்தா சென்றார்கள்? இந்தியாவிலிருந்துதான் தீவிரவாதிகள் திம்பு மாநாட்டிற்கு சென்றார்கள். இந்தியாவில் தீவிரவாதிகளின் முகாம்கள் இருப்பதாக நான் கூறியபோது கண்டித்தார்கள்.

இதுவரை அரசியலமைப்புக்குமாறாக எந்த ஒரு விடயத்திலும் தாம் நடக்கவில்லை.

சர்வகட்சி மாநாட்டில் நாம் நினைத்ததை தீர்மானமாக கொண்டு வருவோம் என்பதற்காக சுதந்திரக் கட்சியினர் வெளியேறினர். நாம் நினைத்தவாறு தீர்மானம் எடுக்கவில்லை.

[இ-க]

பல்கலைக்கழக ஒத்துமாறல்

1985-ம் ஆண்டு யாழ். மருத்துவபீடத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர் கொழும்பு மருத்துவபீடத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

இ. இராஜகுமார்,
இல. 234, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23581
4704

குளிர்சாதனப் பெட்டிகள் (Refrigerators)

பாவனையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

★ எல்லாவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும், டீப்பிறீசர்களும் எமது அனுபமிக்க தொழில் நுட்பவல்லுனர்களால் உங்கள் இல்லத்தில் வைத்து பிழைகளை திருத்திக் கொடுக்கப்படும்.

★ விரும்பிய வசீகரமான வர்ணங்களில் எமது வேலைத்தளத்தில் வைத்து செய்துகொடுக்கப்படும்.

எம்மோடு தொடர்புகொண்டு
இவ்வரிய சேவைகளை பெற்றுக்கொள்ளவும்.
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெற்,
484, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22134.

மரண அறிவித்தல்

வே. புதியாக்குட்டி

அல்வாய் மாறும்புலம் வே. புதியாக்குட்டி 23ம் திகதி காலமானார் இவர் வேலாயுதம் (வையாபுரி), வள்ளிநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும். கணேசமூர்த்தி (ஆசிரியர்), தங்கரத்தினம் ஆகியோரின் மாமனாரும், வே. சிவராசசிங்கம் (யாழ். அபி. சபை, நெல்லியடி உப அலுவலகம்), திருமதி சுபத்திரா சிவராசசிங்கம் (சுமநலச் சேவை நிலையம், அம்பன்), செல்வி சந்திரிகா, செல்வன் சுரேந்திரன் (ஜேர்மனி), ரவீந்திரன், தவீந்திரன், பிறேமினி, கேசவன், அரவிந்தன், வான்மதி ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24ம் திகதி நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(4701) குடும்பத்தினர்.

மண்ணில் இருந்து விண்ணிற்கு

அஞ்சலி '85

அமரர் பொன்னையா கதிரவேலு

(18-4-1916 — 28-7-1983)

மதச்சடங்குகள் 4-8-85 ல்

இலண்டனில் நடைபெறும்

(4695)

ரூ. 24,000 மின்கட்டணம்

வவனியா)

'வவனியா நகரில் உள்ள ஒரு பிரபல வர்த்தகர் 24 ஆயிரம் ரூபாவை மின்கட்டணமாக வவனியா நகரசபைக்கு செலுத்த வேண்டியுள்ளது. இப்படி மக்கள் மின் கட்டணங்களை செலுத்தாது இருந்தால் எப்படி நகரசபை செயல்படுவது' என்று வவனியா நகரசபை உயர் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார். (க)

ஒல்லாந்தில் இறந்த இளைஞரின் சடலம்

(கரவெட்டி)

கடந்த 17-ம் திகதி ஒல்லாந்தில் மரணமான கரணவாய் அண்ணா சிலையடியைச் சேரந்த சிவக்கொழுந்து சந்திரமோகனின் பூதவுடல் நேற்று முன்தினம் கரணவாய்க்குக் கொண்டுவரப்பட்டு இறுதிச்சடங்குகள் நடைபெற்றன

கடந்த ஆண்டு இங்கிருந்து சென்ற அவர் அங்குள்ள ஏரி ஒன்றில் குளித்துக் கொண்டிருந்த போதே சுழிக்குப் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இவர் அங்கு அகதியாகத் தங்கியிருந்தமையால் இவரின் சடலத்தை இங்கு கொண்டுவருவதற்குத் தடைகள் இருந்ததாகவும், அங்கு கடந்த பல வருடங்களாக வகித்து வந்த சீக்கியப் பெண்மணி ஒருவர் அரச உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கைகளையடுத்தே பூதவுடலை இங்கு கொண்டுவர அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டறியாத காட்சி!

றௌலட் அடக்குமுறைச் சட்டம் இந்தியாவில் அமுலுக்கு வந்த காலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின் மிகக் கொடுமையான காலம்.

தென்னாபிரிக்காவில்வெள்ளையர் ஆட்சியில்இந்தியர்கள் பட்ட இம்சைக்கு அகிம்சைமுறையில் பரிகாரங்கண்டு வெற்றிவாகையுடன் திரும்பிய மகாத்மா காந்திக்கு இந்தியர்களுக்கு சொந்த நாட்டில் அடக்குமுறை ஆட்சி இவ்வாறிருந்தது ஆத்திரம் ஊட்டியது.

இந்தியாவுக்கு ஒரளவு புதுமனிதனாகத் தோன்றிய மகாத்மா அன்றைய பெருந் தலைவர்களுடன் மந்திர ஆலோசனை நடத்தினார். மகாத்மாவின் அபூர்வ தலைமைத்துவத்தை அவர்கள் அனைவரும் மெச்சினர்.

றௌலட் சட்டம் இந்திய சட்டசபையில் விவாதிக்கப்பட்டபோது வைஸ்ராயின் முன்னிலையில் இதனை எதிர்த்து உருக்கமாக உரைநிகழ்த்தியவர் உலகம் போற்றும் உத்தம பேச்சாளர் சிறிநிவாசசாஸ்திரி, ஆனால் வைஸ்ராய் அசையவில்லை.

அனைத்து இந்தியாவிலும் பலத்த எதிர்ப்பு தோன்றியது. தமிழக மக்களுடன் தென் ஆபிரிக்காவில் அன்புடன் பழகிய காந்திக்கு தமிழகம் அழைப்பு விடுத்தது.

இந்த அழைப்புக்குக் காலாயிருந்தவர் ராஜாஜி. வாழ்க்கையில் அவரை முதன் முதல் சந்தித்து மகாத்மாவின் உள்ளத்தை ராஜாஜி பறித்துவிட்டார்.

ஒருஇரவு நெடுநேரம் ஆலோசனை செய்து, முடியாத நிலையில் உறக்கத்தில் சென்றனர்.

விடியுமுன் எழுந்த மகாத்மா ''இந்தியா முழுவதிலும் ஹர்த்தால் அனுட்டிப்பது'' என்ற எண்ணம் நித்திரையில் வந்ததென்றார். 'ஹர்த்தால் என்பது ஹிந்திச் சொல், கடைஅடைப்பு என்ற கருத்துக் கொண்டது.

''சபாஷ் மகாத்மாஜி'' என்று ராஜாஜி சொல்ல சென்னையிலிருந்தே கட்டளை பிறந்தது.

1919 ஏப்ரல் 6-ம் திகதி சேது தொடக்கம் இமயம் வரைக்கும் ஒருநாள் ஹர்த்தால் பூரணமாக நிறைவேறியது. இதுவே ஹர்த்தால் தொடங்கிய கதை. பாரதம், ஏன் உலகம் என்றும் காணாத காட்சி அது.

''இறைபற்றினால் வாழ்க்கை ஆனந்தமயமாகும்''

(யாழ்ப்பாணம்)

''இறைபற்று இல்லாத வாழ்க்கை ஓர் வெறுமையான வாழ்க்கை. இறை அநுபவம் ஓர் உயர்ந்த அனுபவம். அணு அணுவாக ஆண்டவனைச் சுவைக்கத் தெரிந்து கொண்டால் வாழ்க்கை ஆனந்தமயமாகும்.''

இவ்வாறு வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆவரங்கால் சிவன் கோவிலில் நடைபெற்ற தீர்த்தத்திருவிழாவில் உறையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும்அவர் 'கோதைசூடிய கோதை' என்ற தலைப்பிலே உரையாற்றுகையில் ஆடிப்பூரம் அன்னை பராசக்திக்கு உரிய நாள். மருத்தாதத்துவமான பூதேவி பெரியாழ்வாருக்கு மகளாக, பிறவிக்கு மருந்தான மணங்கமழ் துளசிச் செடியினடியில் குழந்தையாகத் திருஅவதாரம் செய்த திருநாள். தனது மனத்தையே மாலையாக்கி, மாலவனுக்குச் சூட்டி, அரங்கனுடன் ஐக்கியமானவள் ஆண்டாள். இறைவனுக்குச் செய்யும் தொண்டுகளில் தலைசிறந்தது மாலை தொடுக்கும் திருப்பணியே என்றும் குறிப்பிட்டார்.

விழாவின் நிறைவில் ஆலய நிர்வாகத்தினர் ஸ்ரீ நடராஜ இராமலிங்கசுவாமி தேவஸ்தானத்தின் சார்பில் அம்மையாரின் சைவப் பணிகளைப் பாராட்டி, ''விழை தமிழ் வித்தகி'' என்ற விருதும் அளித்து. பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

கஸட்டுக்கள் தீக்கிரை

[கரவெட்டி]

நெல்லியடி யாழ். வீதியிலுள்ள நிறுவனம் ஒன்றில் ஆறு வீடியோ கசெட்டுகளைக் கைப்பற்றிய 'இளைஞர்கள்' அவற்றை அக்கடை எதிரிலேயே தீவைத்து அழித்தனர்.

நெல்லியடிப் பகுதியில் 'நீலப் படங்கள்' திரையிடப்படுவது குறித்து பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்ப்புக்களையடுத்தே சம்பந்தப்பட்ட இளைஞர் கோஷ்டி பிரஸ்தாப கடைக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

அஸாமில் வெள்ளம்

(புதுடில்லி)

அசாமில் வெள்ள நிலைமை மிகவும் மோசமடைந்து தகவல் தொடர்பு யாவும் பாதிக்கப்பட்டுள்ளது. அறுவடை பயிர்கள் சேதமடைந்துள்ளன.

ஜப்பான் நிலச்சரிவில் 5 பெண்கள் பலி

(டோக்கியோ)

யப்பான் மலைச்சரிவில் அமைந்திருந்த முதியோரின் இல்லமொன்று நிலச்சரிவு ஒன்றில் அடித்துச்செல்லப்பட்டபோது குறைந்தது ஐந்து பெண்கள் இறந்துபோனார்கள் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. 21 பேரைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

11 பேர் நிலத்திற்கடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மீட்புப்பணி நடைபெற்று வருகிறது. (க)

கஜேன்
மினி சினிமா
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
5 OFFENS
WAR FILM
நாட்டின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை வீரர்களின் உணர்ச்சிக் காவியம்

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Escort Girls
வயது வந்தவர்களுக்கு மட்டும்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவில்/
வெலிங்டன் தியேட்டர்
சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30,
7-00 மணி
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

குமரன்
மினி சினிமா
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
Ten to Midnight
(Adults Only)

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
தினசரி 10-30,12-30,2-30
4-45, 7-00
I spit on your Grave
(நீ பிணமானாலும் நான் வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம் பெண் கொடூரமான முறையில் ஒருவர் பின் ஒருவராக கற்பழித்து சித்திரவதை செய்கிறார்கள். அப்பெண் தன்னை கற்பழித்த அந்த நால்வரையும் பழிவாங்கும் திரைச்சித்திரம். காணத் தவறாதீர்கள். சந்தர்ப்பம் மீண்டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும்)

வெலிங்டன்
10-30, 2-15, 4-30,
6-45, 9-00
Five Times All China
Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

மெயர் மினி
(கந்தருமடம்)
10-8 2 30, 6-30
எம். ஜி. ஆர்.—லதா
நேற்று இன்று நாளை

''லதா'' மினி
(கோண்டாவில்)
பிரபு - ரேவதி
கன்னிராசி
10-30, 3-30, 6-45

இன்று மட்டும்
உஷா மினி
(கே. கே. எஸ். வீதியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-30
HELL CATS
(Adults Only)

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
KILL ALL KILL AGAIN
— Karatte Film —
முழுநீள கராட்டிச்சண்டைகள் நிறைந்த பரபரப்பும், விறுவிறுப்புமூட்டும் படம்
—இன்று மட்டும்—

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30, 6-30,
பிரேம் — அஞ்சலி
குரோதம்
(கலர்)
(புதிய வெளியீடு)

மொடேர்ண்
மினி சினிமா
5 X 5 திரையில்
தினசரி 3 காட்சிகள்
புதிய வெளியீடு
சுரேஸ்-அனிதா நடித்த
உன்னைத் தேடி வருவேன்

இன்று முதல்
ஹரன் மினி
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
DIE EROBERER
ஐந்து இளஞ்சிங்கங்களின் பயங்கர கராட்டிச் சண்டைகள் நிறைந்த படம்.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30,
4-30 p m
WENG WENG
Impossible Kid
(Color)
A full action karate
முழு நீள கராட்டி சண்டைகள் நிறைந்தது.

வின்ஸர் (யாழ்.)
Daily 10-30, 2-00, 4-30,
7-00
CAP PEOPLE
ஒரு பெண் கிறுத்தையாக மாறி கோரக் கொலைகள் புரியும் பயங்கரக் காட்சிகள். திகில், மர்மங்கள் நிறைந்த விறுவிறுப்பான வர்ண ஓவியம்,
(புதிய பிரதி)
வயது வந்தவர்கட்கு மட்டும்.

"யாழ். லீக்" நடாத்தும்

7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

''யாழ் உதை பந்தாட்ட லீக்''கினால், யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப் படவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டிகளில், முதலாவது போட்டியாக ''7வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி, அடுத்த மாதம் 3 ம் 4 ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

''யாழ்.உதை பந்தாட்ட லீக்''கில நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் 15விளையாட்டுக் கழகங்களில், 7-விளையாட்டுக் கழகங்களே, மேற்படிப் போட்டியில் பங்குபற்றுகின்றன. மற்றைய கழகங்கள். இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு உரிய நேரத்தில் விண்ணப் பிக்கத் தவறியதால், இக் கழகங்களை இப் போட்டியில் பங்கு பற்ற மேற்படி லீக்கின் ''போட்டிக் குழு''அனுமதிக்கவில்லை'' என போட்டிக் குழுவின் தலைவர் திரு சற் சிங்கராயர் கூறினார். ''7 வீரர்கள் கலந்து கொள்ளும் இப் போட்டியில் பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்களின் பெயர்கள் பின் வருமாறு:- அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், யாழ் முஸ்லீம் விளையாட்டுக் கழகம், வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ் பல்கலைக் கழகம், பொற்பதி விளையாட்டுக்கழகம் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம்.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இப் போட்டி அடுத்த மாதம் 3-ம் திகதி காலை 8-30 க்கு ஆரம்பமாகி மாலை வரை நடைபெறும். 4-ம் திகதி மாலை 4-மணிக்கு சாம்பியன் மோதல் நடைபெறும்.

இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக, முன்னாள் பிரபல்ய யாழ் உதை பந்தாட்ட வீரர் திரு எஸ் சிறில் கலந்து கொள்கின்றார்

முன்னாள், சிறந்த உதைபந்தாட்ட வீரர்களை கௌரவிக்கும் முகமாக, ''யாழ் உதை பந்தாட்ட லீக்''இது போன்ற போட்டிகள் பலவற்றை முன்பும் நடாத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

"எதையும் எதிர்பாராது ஏழைகளுக்கு உதவுங்கள்"

நாவாந்துறையில் யாழ். ஆயர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில், புனித வின் சென்ற்டி போல் சபை ஆரம்பிக்கப்பட்டு 75வது வருட நிறைவு விழாவை முதலாவது கொண்டாடும் பெருமை நவாந்துறைப் பங்கு மக்களுக்கு மட்டுமல்ல யாழ்.மறை மாவட்டம் பெருமை அடைந்துள்ளது என்று கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்'

யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகை, நாவாந்துறை புனித வின்சென்ற்டி போல் சபையின் மூன்றுவது தினத்தன்று, புனித பரலோகமாதா ஆலயத்தில் நடாத்திய திருப்பலிப் பூசையில் அருளுரை நிகழ்த்துகையில் கூறினா.

ஐந்து குருவானவர்களுடன் சேர்ந்து ஆயர் அதிவண.தியோகுப்பிள்ளை ஆண்டகை இத் திருப்பலிப் பூசையை நடாத்தினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்.''அயலவனுக்குச்செய்யும் போதெல்லாம் எனக்கே செய்கின்றீர்கள் என்று யேசு கூறிய வார்த்தைகளை நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஆதலால் அயலவனில் யேசுவைக்காணுங்கள் எதையும் எதிர்பாராது வறியவர்களுக்கு உதவி செய்யுங்கள் அதுவே இறைவனுக்கு உகந்ததாய் இருக்கும் புனித வின்சென்ற்டி போலும் அவ்வாறு செய்த படியால்த் தான் அவரது நாமம் நிலைத்து நிற்கின்றது'' என்றார்.

விழாத் தொடர்பாக பங்குத்தந்தை அருட்திரு.பி எம். இம்மானுவேல் அடிகளாரால் மறைக் கல்விப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு ஆயர் பரிசில்களை வழங்கினார்.

முதலாவது பரிசு பிரான்சீஸ் அங்லா என்பவருக்கு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் விழா ஆரம்பமானது. விழாவிற்கு தலைமை தாங்கிய பங்குத்தந்தை வருகை தந்தவை அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், புனிதவின்சென்ற்டி போல் சபை அங்கத்தவர்கள் மட்டும் இவ் விழாவைக் கொண்டாடவில்லை பங்கு மக்கள் ஒவ்வொருவரும் தமக்கெடுக்கப்பட்ட பெரு விழாவாக ஒற்றுமையுடன் மகிழ்ச்சி பொங்க இவ் விழாவைக் கொண்டாடியது நாவாந்துறை வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப் படவேண்டும் என்று சொன்னார். அடுத்து நாவாந்தறை புனித நீக்கிலார் பந்தி தலைவர் நீ வின் சென்டிபோல், புனிதபரலோக மாதா பந்தித் தலைவர் ம. ஞானமுத்து ஆகியோர் உரை நிகழ்த்தினர். இணைச் செயலாளர் ம. பரியதாஸ் வரலாற்று அறிக்கை வாசித்தார். இதையடுத்து யாழ்.மறை மாவட்ட புனித வின்சென்ற்டிபோல் மத்திய சபை இயக்குனர் அருட்திரு என். ஹில்லறி ஜெபநேசன் அடிகள் இலங்கை தேசிய சபைச் செயலாளர் என் லியோ எதிர்மன்னசிங்கம், யாழ் மத்திய சபைத்தலைவர் சி ஆர். யோசவ், வண ஏரியன் அடிகளாருடன் இன்னும் பல சபைத் தலைவர்கள் உரை நிகழ்த்தினர்.

சகோதரர்கள் யோ பிரான்சீஸ், ம. மரியதாஸ், ம. சிந்தாத்துரை ஆகியோரால் கவிதைகள் பாடப்பட்டன. செயலாளர் சகோதரர் யோ. சந்தியோ நன்றிகூறினார்.

முல்கிரிகல தேர்தல்:

நியமனப்பத்திரம் 15ம் திகதி

(கொழும்பு)

முல்கிரிகல தேர்தல் தொகுதியின் வெற்றிடத்திற்கு வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் அடுத்த மாதம் 15ம் திகதி அம்பாந்தோட்டைக் கச்சேரியில் முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன

போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் கட்டுப் பணத்தை அம்பாந்தோட்டைக் கச்சேரியில் தேர்தல் அதிகாரியிடம் அன்று நண்பகல் 11 மணிவரை செலுத்தலாம்.

இந்தத் தேர்தல் தொகுதிக்கு வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் 85-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதி ஏற்றுக் கொள்ளப்படவிருந்தன. ஆனால் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இது பின்போடப்பட்டது குறிப்பிடத்தக்கது

உண்மையுடன்

வழிபடுவோருக்கு இறைவன் வேண்டியதைக் கொடுப்பான்

(யாழ்ப்பாணம்)

''உண்மை அன்புவைத்து வழிபடும் அடியார்க்கு வேண்டியதைச் செய்துகொடுப்பான இறைவன் இதைச் சுந்தரர் வாழ்க்கை எமக்கு எடுத்துக் காட்டுகிறது ''

இவ்வாறு ஓய்வுபெற்ற அதிபர் திரு ச. ஆனந்தர் கோண்டாவில் மஞ்சத்தடி விவேகானந்த கிராம முன்னேற்றச் சங்கம் நடத்திய சுந்தரர் குருபூசையில் கூறினர்

மேலும் அவர் உரையாற்றுகையில், 'சைவசமயத்தைத் தாங்கிநின்ற நான்கு தூண்களில் சுந்தரரும் ஒருவர் அவர் தமக்கு வேண்டியதை இறைவனிடம் உரிமையுடன் கேட்டுப் பெற்றார்'' என்றார்.

தலைமையுரை நிகழ்த்திய பண்டிதர் திரு வே சண்முகலிங்கம் அவர்கள், சைவ உலகுக்கு நாயன்மார்களை திருத்தொண்டத்தொகை' மூலம் அறிமுகப்படுத்திய பெருந்தகை சுந்தரர் என்றார் திரு. செ நடராசாவும் பேசினார்.

தியாகிகளுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. குருபூசையை விவேகானந்தா சங்க முகாமையாளர் திரு தம்பிராசா ஒழுங்கு செய்திருந்தார்.

அரச ஊழியர்களுக்கு

ரூ. 200 சம்பள உயர்வு!

(அலுவலக நிருபர்ஏ வி எம்)

தற்போதைய வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கும் முகமாக அரசாங்க ஊழியர்களுக்கு 200 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது

இச் சம்பள உயர்வு ஆகஸ்ட் மாதத்திலிருந்தா அல்லது புதிய வரவு செலவுத் திட்டத்திலிருந்தா வழங்குவது என்பது குறித்துத் திறைசேரி ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

அமைச்சரவைச் செயலாளர் ஜி.வி பி.சமரசிங்கா தலைமையிலான குழுவின் சிபார்சுக்கிணங்க இச் சம்பள உயர்வு வழங்கப்படுகிறதாம்.

(மா)

தமிழர் கொலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட திரைச்சீலையை இருவர் தாங்கிச்செல்ல, அவர்கள் பின்னே வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தையும் மற்றும் இனக் கலவரத்தில் பலியானவர்களின் நிலையையும் சித்திரிக்கும் சித்திரங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலத்தில் சென்றவர்கள் ஆக்ரோஷமான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். சுலோக அட்டைகள் ஏராளமாகக் காணப்பட்டன.

''புதிய பாதை அமைப்போம்'', ''தமிழீழமே எங்கள் தாயகம்'', ''ஏகாதிபத்தியத்தை ஒழிப்போம்'', ''எங்கள் பாதை புதிய பாதை'', ''இனப் படுகொலை இலங்கை அரசுக்கு வழமை. அதை அடக்குவது எங்கள் கடமை'', ''83-ல் மறைந்த தமிழ் மக்களுக்கு எமது அஞ்சலி' போன்ற சுலோகங்கள் அவ்வட்டைகளில் காணப்பட்டன.

இந்த ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக நாச்சிமார் கோவில் முன்றலை வந்தடைந்து, சேர் பொன். இராமநாதன் வீதி வழியாக யாழ். பல்கலைக்கழக வளவைப் பிற்பகல் 5 மணிக்குச் சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தில் தனது பிஞ்சுக் குழந்தையை அரவணைத்துப் பாலூட்டிய வண்ணம் ஒரு தாய் கோஷமெழுப்பிச் சென்றது ஊர்வலத்தில் குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

ஊர்வலத்தினர் யாழ். பல்கலைக் கழக வளவை வந்தடைந்ததும் அமைதியாக உட்கார்ந்தனர்.

இளைஞர்கள்-யுவதிகள் கொண்ட குழுவொன்று நீண்ட அஞ்சலிப் பாடல் பாடியது.

'அஞ்சலி செய்வோம் அஞ்சலி செய்வோம், செங்குருதியைச் சிந்தியை தோழர்களை நினைத்து' என்று தொடங்கும் பாடல் அது.

தொடர்ந்து 83 ஜூலை இனப் படுகொலைகளையும் அவற்றின் விளைவுகளையும் கண்டித்து பலர் உரைநிகழ்த்தினர்.

6 மணியளவில் ஊர்வலத்தினர் தத்தம் இடங்களைப் நோக்கி வாகனங்களில் புறப்பட்டனர். [மா)

இலங்கை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது.

மிக விரைவில் இலங்கை முஸ்லிம் தலைவர்களைக் கொண்ட குழுவினர் தமிழகம் சென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும் மற்றும் தமிழ்த் தலைவர்களையும், தமிழகத்தின் முஸ்லிம் தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், பிரச்னைகளுக்கான சமாதானத்தீர்வுகள் பற்றி இலங்கை முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுக்களையும் ஆலோசனைகளையும் நடத்தும்பொருட்டும் இலங்கை முஸ்லிம் தலைவர்களின் தமிழக விஜயத்தை அங்குள்ள தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் ஆவலோடு எதிர்பார்ப்பதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

ராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

மரணமானவர் அணிந்திருந்த பெனியனால் கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் கொலையுண்டு கிடந்தவரின் சடலம் உடனடியாக உறவினர்களால் கிளிநொச்சி ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் சேர்க்கப்பட்டது.

விசாரணையின் பின் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுச் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இம் மரணம் கிளிநொச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சியில் பூரண ஹர்த்தால்

[கே. வி. கே. திருலோகமூர்த்தி]

கிளிநொச்சி மாவட்டத்தில் 25ம், 26ம் திகதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

சகல கடைகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டிருந்தன. அலுவலகங்களும் வெறிச்சோடிக்கிடந்தன.

இதேவேளை கிளிநொச்சி நகரில் ஆங்காங்கே பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன. பரந்தனிலும் மற்றும் வட்டக்கச்சி, இராமநாதபுரம், ஆனையிறவுப் பகுதிகளிலும் சத்தங்கள் கேட்டன. பொலிஸ், இராணுவ முகாம் பக்கமாகத் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் மாணவர்கள் வரவில்லாததால் மூடப்பட்டிருந்தன. ஆங்காங்கே கறுப்புக்கொடிகளும், குட்டிமணி, தங்கத்துரை முதலானோரின் பெரிய அளவிலான உருவப்படங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன.

இதேவேளை ஹர்த்தாலுக்கு முன்தினம் 23ம் திகதி ஆயுதம் தாங்கியோர் கிளிநொச்சி நகர் ஊடாக நடைபாதை ரோந்து சென்றனர். இவர்கள் துப்பாக்கிவேட்டுகளைத் தீர்த்ததாகவும் தெரிய வந்தது.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், பளை உதவி அரசாங்க அதிபர் [illegible] அமைதியான ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மாங்குளம், முல்லைத்தீவில்

மாங்குளம், முல்லைத்தீவுப் பகுதிகளிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலைகளுக்கு மாணவர் அறவே செல்லவில்லை அலுவலகங்களில் கணிசமான அளவு ஊழியர் வரவு இருந்தது. பொதுமக்கள் நடமாட்டம் இப்பகுதிகளில் வெகுவாகக் குறைந்திருந்தது.

வேலணை மக்கள் விடுத்துள்ள பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

''கூட்டுச் சேர்ந்த விடுதலை இயக்கங்களே! ஊழலற்ற சமூகத்தினை உருவாக்கித் தாருங்கள்'' என்ற தலைப்பிடப்பட்ட பிரசுரம் ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

அப் பிரசுரத்தின் அடியில் 'வேலணை மக்கள்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

(மா)

பூட்டான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டாவது பேச்சுவார்த்தையினை நடத்த ஏற்பாடு செய்யுமென்றும் அந்த அறிக்கை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட போதிலும் பாதுகாப்புப் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் படையினருக்கு நவீன ஆயுதங்களும் வழங்கப் பட்டுள்ளனவாம். குறிப்பாக விமானப்படைக்குப் புதிதாக ஆறு விமானங்கள் பெறப்பட்டுள்ளதுடன் நவீன ரடார சாதனங்களும் பயன்படுத்தப் படவுள்ளதாகவும் அறிவிக்க பட்டது. [ரா]

திருமலையில் மேலும் ஒருவர் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலையின் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

சோமபால என்ற இவர் ப. நோ. கூ. சங்கத்தின் இயக்குனராகப் பணியாற்றியவராம்.

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் இவர் தமது வீட்டில் வைத்துத் துப்பாக்கியால் சுடப்பட்டாராம்.

திருக்கோணமலையில் இந்த வாரத்தில் இடம்பெற்ற மூன்றாவது கொலைச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (நெடுந்தீவு நி.மா.)

தீவுப் பகுதியில் இடம் பெற்ற ஹர்த்தால்

(வேலணை)

83 ஜூலைக் கலவரத்தின் போது வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தீவிரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக கடந்த 24, 25, 26, ம் திகதிகளில் தீவுப்பகுதி எங்கும் ஹர்த்தால் அனுஷ்ட்டிக்கப் பட்டது.

மூன்று தினங்களிலும் இப் பகுதிகளில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள், தனியார் தொழிற்சாலைகள் என்பன யாவும் பூட்டப்பட்டிருந்தன. எவ்வித வாகன நடமாட்டமும் இருக்கவில்லை.

வேலணை வங்களாவடிச் சந்தியில் பிரமாண்டமான உயரத்தில் கொலை செய்யப்பட்ட 'ரெலோ'த் தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை ஆகிய இருவரது உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தது. அவ்வுருவப்படங்களின் மீது அழகான மலர் மாலையும் அணிவிக்கப் பட்டிருந்தது. (மா)

மரண அறிவித்தல்

இளையதம்பி இராமலிங்கம்

முன்னைநாள் பூநகரி உடையார் அமரர் இளையதம்பியின் மகன் இராமலிங்கம் காலமானார். இவர் மகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், தங்கரெட்னம், சண்முகலிங்கம், விசாகப்பெருமாள் (இலங்கைவங்கி, ஹட்டன்), பேரின்பநாயகம், தெய்வமலர் (இராமகிருஷ்ண மிஷன், செங்கல்பட்டு), பாலா இராமலிங்கம் (பிரான்ஸ்), பதுமராணி, தெய்வேந்திரன் (U. K), மகேந்திரன் (U. K) ஆகியோரின் தந்தையும், திருநாவுக்கரசு, பேரானந்தம் சத்தியா, மரிச்சா (France) ஆகியோரின் மாமனாரும், சிவரெட்னத்தின் சகோதரரும், அமரர் ஞானேஸ்வரி அம்மா, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 28-07-85 ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணியளவில் 304, கல்வாணி வீதி, காங்கேசன்துறையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கீரிமலை ஐயனார்கோவிலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். (4639

மரண அறிவித்தல்

கணபதிப்பிள்ளை சிவனம்மா

ஆனைக்கோட்டை 3-ம் கட்டையடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவனம்மா காலமாகிவிட்டார். அன்னார் பாரிசில் அகாலமரணமடைந்த கேந்திரகுமாரினதும், மகேந்திரகுமார், லீலாவதி, பாலேந்திரகுமார் [சவூதி அரேபியா], யுகாவதி, பிரேமாவதி, இராஜேந்திரகுமார், ரேணுகாவதி, பத்மாவதி, வாலாம்பிகை, மாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயக்குமாரி [இராஜரெட்ணம் பஞ்சாயார் டூர்ஸ்], மாதவன், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-07-85 இன்று மாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

4719

மரண அறிவித்தல்

வைத்திலிங்கம் சரவணமுத்து J.P.

தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியைச் சேர்ந்த மலாயன் பென்சனர் வைத்திலிங்கம் சரவணமுத்து J.P. காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மங்கயற்கரசியின் அன்புச் சகோதரரும், சிவபாதசுந்தரம், செல்வநாயகம் B Sc. [இளைப்பாறிய ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி] ஆகியோரின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரியின் சிறிய தகப்பனாரும், மரகதவல்லி செல்வராசா, கணேசன் [பட வரைஞர், மத்தியபொறியியல்சபை, கொழும்பு], சண்முகானந்தன் [பயிர்செய்கை உத்தியோகத்தர், மயிலிட்டி வடக்கு], விஜலட்சுமி [விஜி] [தையல் ஆசிரியை, உடுவில் சனசமூக நிலையம்], சதானந்தன் [யாழ்ப்பாண தொழில்நுட்பக்கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புப் பேரனும், தர்சனின் பூட்டனும் ஆவார்.

இவர் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை, யாழ். மலாயன் பென்சனர் சங்கம் ஆகியவற்றின் முன்னைநாள் தலைவரும், மாவை - கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொல்லங்கலட்டியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கீரிமலை செம்மன் வாய்க்கால் இந்து மயானத்துக்குத்தகனக்கிரியைகளுக்காக 28-7-85 [இன்று] காலை 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

[4707]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 ,24126